E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2023 ஓகஸ்ட் 12 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN

வரு. 91 இல. 190 | Saturday 12, August, 2023 | 11 பக்கங்கள்

மலையக மக்களின் பிரச்சினைகளை தீர்க்க

## ஜனாதிபதி ரணில் மிகவும் அக்கறையுடன் செயற்படுகிறார்

### அமைச்சர் ஜீவன் தொண்டமான்



மலையக மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டுமென்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகவும் அக்கறையுடன் செயற்படுகின்றார். மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 06


200 வருடங்களாக நாட்டுக்கு அந்நிய செலாவணியை ஈட்டித் தருவதில் பெரும் பங்கு

# தேசிய நீரோட்டத்தினுள் இனி மலையக மக்களும் இணைப்பு

### மலையக மக்கள் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு



தனி ஒரு இனக்குழுவாகவோ, தோட்டப்புற மக்களாகவோ வாழ வைப்பதற்கு பதிலாக சமூகத்தில் ஏனைய மக்களுடன் ஒன்றிணைப்பதே எதிர்பார்ப்பென்றும் ஜனாதிபதி தெரிவிப்பு



நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதற்காக இரண்டு நூற்றாண்டுகளாக உழைத்து வரும் மலையக தமிழ் மக்களை தொடர்ந்தும் தனியான இனக்குழுவாக அன்றி, இலங்கை சமூகத்துடன் இணைத்துக்கொள்ள வேண்டுமென்று, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

இந்தப் பணி மிகவும் சவால் நிறைந்தது என்றாலும், இதற்கான வேலைத்திட்டமொன்று அவசியமெனவும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

மலையக தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார், பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் 06

## விவசாயத்தை நவீனமயப்படுத்தும் பணிகளை துரிதப்படுத்த வேண்டும்

### இது தொடர்பில் விவசாய செயலணியை நிறுவ ஜனாதிபதி எதிர்பார்ப்பு



விவசாய நவீனமயப்படுத்தல் செயற்பாடுகள் மூலம் நாட்டின் விவசாயத்துறையில் புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தும் பணிகளை துரிதப்படுத்த வேண்டுமென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

விவசாயம் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கான செயலணியொன்றை உருவாக்கவுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, பெருந்தோட்ட, நீர்ப்பாசன, மகாவலி அபிவிருத்தி அமைச்சுகளை இணைத்து தனியார் துறையின் பங்கெடுப்புடன் மேற்படி செயலணியை நிறுவ எதிர்பார்த்திருப்பதாகவும் சுட்டிக் காட்டினார்.

'விவசாயத்துறை நவீனமயப்படுத்தல்' எனும் விடயம் தொடர்பாக ஜனாதிபதி அலுவலகத்தில் 06

## 'டைனமைற்' மூலம் மீன்பிடிப்பதை நிறுத்த விரைவில் உரிய நடவடிக்கை

### கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி



வெடிபொருட்கள் மற்றும் டைனமைற்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கடற்றொழிலை தடுப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுமென, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார். 06

தேர்ச்சியுடன் பட்டப்படிப்பை நிறைவு செய்ய

## விளையாட்டு பல்கலையை விரைவில் நிறுவ நடவடிக்கை



### இராஜாங்க அமைச்சர் ரோஹண திஸாநாயக்க

விளையாட்டுத்துறையில் தேர்ச்சியுடன் பட்டப்படிப்பை நிறைவு செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் உத்தேச விளையாட்டு பல்கலைக்கழகத்தை துரிதமாக ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய நடவடிக்கை எடுத்துள்ளதாக, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் 06

## கீரிமலை கேணியும் தொல்லியல் திணைக்கள கட்டுப்பாட்டுக்குள்!

### முயற்சி எடுக்கப்படுவதாக அ.இ.இந்துமாமன்றம் கண்டனம்



வரலாற்றுச் சிறப்புமிக்கதும் சைவ மக்களின் முக்கியமானதும் சமய சம்பிரதாயங்களுடன் தொடர்புடையதுமான யாழ். கீரிமலை கேணியையும் தொல்லியல் திணைக்களம் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிப்பது கண்டிக்கத்தக்கதென, அகில இலங்கை இந்து மாமன்றம் தெரிவித்தது.

ஒவ்வொரு சைவ ஆதாரங்களையும் தொல்லியல் திணைக்களம் கையகப்படுத்த நினைப்பதும் 06

## பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் ஆளுநர் செந்திலுடன் சந்திப்பு

### கிழக்கு அபிவிருத்தி குறித்து கலந்துரையாடல்



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தாரீக் எம்டி அரிஃபுல் இஸ்லாம் (Tareq Md Ariful Islam) ஆகியோருக்கிடையில் நேற்று ஆளுநர் செயலகத்தில் நட்பு ரீதியான சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திகள் தொடர்பாக இவர்கள் இருவரும் கலந்துரையாடியதுடன், நினைவுச்சின்னங்களையும் பரிமாறிக்கொண்டனர்.

முன்னாள் எம்.பி. ஸ்ரீரங்கா மீதான கார் விபத்து குற்றச்சாட்டு;

# செட்டிகுளம் முன்னாள் OICக்கு ஆறுமாத கால சிறைத்தண்டனை

### சாட்சியங்களை மறைத்தமைக்காக நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஊடகவியலாளருமான ஜே.ஸ்ரீரங்காவால் ஏற்படுத்தப்பட்ட கார் விபத்துக்கான சாட்சியங்களை மறைத்ததாக குற்றம் சாட்டப்பட்ட, அப்போது செட்டிகுளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய பிரதம பொலிஸ் பரிசோதகர் சுகத் ரொஷான் சஞ்சீவ என்ற நபருக்கு 6 மாதகால சிறைத் தண்டனை நேற்று விதிக்கப்பட்டது. வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் இத்தண்டனையை 7 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையாக விதித்து தீர்ப்பளித்தார்.

அத்துடன், வாகன விபத்தில் கொல்லப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட்டின் மனைவிக்கு 06

தலைமன்னார் முதல் மாத்தளை வரையான

## மலையக எழுச்சிப் பயணம்; இன்று நிறைவுக்கு வருகிறது

### அனைவரையும் ஒன்றுபட அமைப்பாளர்கள் அழைப்பு



தலைமன்னாரிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட மலையக எழுச்சிப் பயணத்தின் நிறைவு நாள், மாத்தளையில் இன்று (12) நிறைவடைகின்றது.

'மாண்புமிகு மலையக மக்கள்' 06

129 மீற்றர் நீளம்; 138 பணியாளர்கள்

## கொழும்பு துறைமுகத்தில் சீனாவின் போர்க்கப்பல்



சீனாவினுடைய கடற்படையினரின் போர்க்கப்பலான HAI YANG 24 HAO கொழும்பு துறைமுகத்தை நேற்று முன்தினம் (10) வந்தடைந்துள்ளது.

129 மீற்றர் நீளம் கொண்ட இந்தக் கப்பலில் 138 பணியாளர்கள் உள்ளதுடன், கமாண்டர் ஜின் சின் இதற்கு தலைமை தாங்குகிறார். 06

போலி ஆவணம் தயாரித்த குற்றச்சாட்டு;

## சட்டத்தரணி பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட சட்டத்தரணி

### உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது



போலியான ஆவணம் தயாரித்தாரென்ற குற்றம் நிரூபிக்கப்பட்ட சட்டத்தரணி ஒருவரை தகுதி நீக்கம் செய்து உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, எஸ்.துரைராஜா மற்றும் மஹிந்த சமயவர்த்தன ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு நேற்று (11) நடைபெற்ற போதே, இந்த தீர்ப்பை 06

மட்டக்களப்பில் போலி முகவர் கைது!

## டுபாயில் வேலை பெற்று தருவதாக கூறி பண மோசடி

### 150 பேரிடம் சுமார் 02 கோடி ரூபா ஏப்பம்



டுபாயில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி 150 பேரிடம் சுமார் இரண்டு கோடி ரூபா பணத்தை பெற்றுக்கொண்டு ஏமாற்றிய குற்றச்சாட்டில் போலி முகவர் ஒருவர் மட்டக்களப்பில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலையைச் 06



**புலிகளின் பணம், ஆயுதங்களை தேடிச்சென்ற நால்வர் கைது!**
அதிநவீன ஸ்கேனிங் இயந்திரங்களும் சிக்கின
03



**பாடசாலைகளுக்கான மேலதிக நீர் கட்டண சுமையை அரசே ஏற்கும்**
எவர் மீதும் சுமத்தப்படாது என்கிறார் கல்வியமைச்சர்
03



**இலங்கைக்கு கடத்தவிருந்த 200Kg கடலட்டைகள் பறிமுதல்**
தேவிபட்டினத்தில் இருவர் கைதாகினர்
03

## யோஹானிக்கு USA இல் கிடைத்த கௌரவம்

### நியூயோர்க் சதுக்கத்தில் புகைப்படம் காட்சி



இலங்கையின் பிரபல பாடகி யோஹானிக்கு அமெரிக்காவில் மற்றுமொரு கௌரவம் கிடைத்துள்ளது. அமெரிக்காவின் நியூயோர்க் சதுக்கத்தில் யோஹானியின் 06

கடந்த 24 மணிநேரத்தில் நாட்டில்

## அதிக வெப்பநிலை வவுனியாவில் பதிவு



நாட்டில் கடந்த 24 மணிநேரத்தில் அதிக வெப்பமான வானிலை வவுனியா மாவட்டத்தில் பதிவாகியுள்ளது. இந்நிலையில், வவுனியா மாவட்டத்தில் 37.7 பாகை செல்சியஸ் அளவில் வெப்பநிலை பதிவாகியுள்ளதாக, வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது.

அத்துடன், குறைந்த வெப்பநிலையாக நுவரெலியா மாவட்டத்தில் 12.6 பாகை செல்சியஸ் வெப்பநிலை நிலவியதாகவும், 06

## போலியான வீஸாவில் பிரான்ஸ் செல்ல முயற்சி

### மாத்தறை வாசி விமான நிலையத்தில் கைது



போலி வீஸாவை பயன்படுத்தி டுபாய் வழியாக பிரான்ஸ் செல்ல முயன்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர், கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகளால் நேற்று முன்தினம் (10) கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். 06

முட்டை உற்பத்தி பன்மடங்கு அதிகரிப்பு;

## முட்டையின் விலைகள் அடுத்த வாரம் குறையும்

### ரூ. 45 முதல் 46க்கு வாங்கலாம்



இலங்கையில் தற்போது நாளொன்றுக்கு முட்டை உற்பத்தி சுமார் 500,000ஆக அதிகரித்துள்ளதாக, அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்தார்.

இதன் காரணமாக அடுத்த வார ஆரம்பத்தில் முட்டையொன்றை 45 ரூபா முதல் 46 ரூபாவரை நுகர்வோர் வாங்கலாமெனவும், அவர் தெரிவித்தார். நாட்டில் முட்டைகளுக்கான தேவை கடந்த காலங்களில் 06

## எட்டாவது மாடியிலிருந்து தவறி வீழ்ந்தவர் மரணம்

### வெள்ளவத்தை மாடிக் குடியிருப்பில் சம்பவம்



வெள்ளவத்தை, பிரட்ரிக்கா வீதியை அண்டி அமைந்துள்ள மாடிக் குடியிருப்பிலிருந்து தவறி வீழ்ந்து இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். எட்டாவது மாடியிலிருந்து இந்த இளைஞர் நேற்று முன்தினம் காலை

தவறி விழுந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இளைஞர் காயமடைந்த நிலையில், களுபோவில கொழும்பு தெற்கு 06

# சர்வதேச செய்திகள்

## ரொஹிங்கிய அகதி படகு மூழ்கி 23 பேர் உயிரிழப்பு



ரொஹிங்கிய அகதிகளை ஏற்றிச்சென்ற படகு கடலில் உடைந்ததில் குறைந்தது 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

காணாமல்போன மற்றவர்களை மீட்புப் பணியாளர்கள் தொடர்ந்து தேடிவருகின்றனர். சுமார் 30 பேரைக் காணவில்லை என்று நம்பப்படுகிறது. 8 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

படகில் எத்தனை பேர் இருந்தனர் என்பது தெளிவாகத் தெரியவில்லை. 50க்கும் அதிகமானோருடன் படகு, மலேசியா நோக்கி கடந்த ஞாயிற்றுக்கிழமை (6) சென்றபோது சம்பவம் நேர்ந்ததாக உள்ளூர் ஊடகங்கள் குறிப்பிட்டன.

மியன்மாரின் மேற்குப் பகுதியில் உள்ள ரக்கைன் மாநிலத்தில் இருந்து தப்பிச்செல்ல முயன்றபோது அசம்பாவிதம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

மியன்மாரில் சிறுபான்மை ரொஹிங்கிய மக்கள் பாகுபாட்டுக்கு முகம்கொடுத்து வருவதாக மனித உரிமை குழுக்கள் குறிப்பிட்டுள்ளன. அங்கு 2017 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையில் 750,000 அளவு ரொஹிங்கிய அகதிகள் வெளியேற்றப்பட்டு பங்களாதேஷில் உள்ள அகதி முகாமில் தஞ்சமடைந்தனர்.

## இசை நிகழ்ச்சியால் இத்தாலியில் பூகம்பம்



இத்தாலியின் ரோம் நகர மக்கள் இசை நிகழ்ச்சி ஒன்றால் பூகம்பம் ஏற்பட்டதாக அச்சமடைந்துள்ளனர். இதனால் கடந்த திங்கட்கிழமை (7) இரவு சுமார் 100 பேரிடம் இருந்து அவசர அழைப்பு கிடைத்துள்ளது.


இத்தாலி தேசிய நில அதிர்வுக் கண்காணிப்பு நிலையத்திலும் அதிர்வுகள் பதிவாயின.

ஆனால், அது இயற்கையாக நேர்ந்ததல்ல. அமெரிக்க இசை கலைஞர் டிரேவிஸ் ஸ்கோட் இசை நிகழ்ச்சியே அதற்குக் காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது.

கொலசியம் அரங்கிற்கு அருகிலுள்ள செர்கஸ் மக்சிமஸ் கலை அரங்கில் நிகழ்ச்சி நடந்தது. 'கொஞ்சம் சத்தம் போடுங்களேன்' என்று டிரேவிஸ் ஸ்கோட் 60,000 பார்வையாளர்களிடம் கேட்டுக் கொண்டார். அவர்கள் மேலே குதித்து குரல் எழுப்பியபோதே இந்த அதிர்வு ஏற்பட்டுள்ளது.

பழைமையான செர்கஸ் மக்சிமஸ் அரங்கில் அத்தகைய நிகழ்ச்சிகளைத் தடைசெய்யும்படி நகர நிர்வாகிகள் கோரியுள்ளனர். இசை நிகழ்ச்சிகள் அரங்கிற்கும் வட்டார மக்களுக்கும் அபாயம் ஏற்படுத்துவதாக அவர்கள் கூறினர்.

## செவ்வாயில் பூமியை போன்ற பருவநிலை



செவ்வாய் கிரகத்தில் ஒரு காலத்தில் பூமியைப் போன்ற பருவநிலை இருந்ததற்கான ஆதாரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குளிர்ச்சியான, வறண்ட பருவங்கள், இரண்டும் மாறி மாறி அங்கு வந்திருக்கின்றன. செவ்வாய் கிரகம், ஒரு காலத்தில் உயிர்கள் வாழ்வதற்கு உகந்த இடமாக இருந்திருக்கலாம் என்று நேச்சர் சஞ்சிகை வெளியிட்ட கண்டுபிடிப்புகள் கூறுகின்றன.

நாசாவால் வெளியிடப்பட்ட அந்தப் படம், வண்டல் பாறைகளில் அறுகோணப் படிம வடிவங்களைக் காட்டுள்ளது.

இன்று செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பு ஒரு வறண்ட பாலைவனமாக இருக்கிறது. ஆனால் பல பில்லியன் ஆண்டுகளுக்கு முன் அங்கு பரந்த ஏரிகளும் ஆறுகளும் இருந்திருக்கலாம் என்று ஆய்வாளர்கள் நம்புகின்றனர். செவ்வாய் கிரகத்தில் பாய்ச்சப்பட்ட நாசாவின் கியுரியோசிட்டி விண்கலம் கடந்த பத்தாண்டுகளாக கேல் பள்ளத்தாக்கு பகுதியின் வெவ்வேறு அம்சங்களை ஆராய்ந்து வருகிறது.

அங்கு உயிரினங்கள் இருந்திருக்கக் கூடும் என்ற கருத்து நிலவுகிறது.

தொடர் ஆய்வுகளின் மூலம் அதற்கு விடை கிடைக்கும் என்று ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

## சுமார் 50 ஆண்டுகளுக்குப் பின் ரஷ்ய விண்கலம் நிலவு பயணம்



ரஷ்யா சுமார் 50 ஆண்டுகளில் முதல் முறையாக நிலவுக்கு விண்கலத்தை ஏவியுள்ளது.

விண்வெளி ஆய்வில் முன்னோடியாக சோவியட் ஒன்றியம் இருந்தபோது 1976 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதல் முறையாக நிலவை ஆய்வு செய்ய லூனா–25 என்ற விண்கலத்தை கடந்த வியாழக்கிழமை (10) விண்ணில் செலுத்தியது.

இந்த விண்கலம் 5 நாட்கள் பயணம் செய்து நிலவின் சுற்றுவட்டப் பாதையை அடையும் என்றும், பின்னர் 5 முதல் 7 நாட்கள் சுற்றுவட்டப் பாதையில் பயணம் செய்து நிலவில் தரையிறங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்தியா அனுப்பிய சந்திரயான் –3 விண்கலம் நிலவில் தரையிறங்கும் அதே நாளில் ரஷ்யாவின் லூனா–25 விண்கலம் தரையிறங்குகிறது. இதற்காக மூன்று இடங்களை ரஷ்ய விஞ்ஞானிகள் தேர்வு செய்துள்ளனர்.

நிலவில் மாதிரிகளை சேகரித்து நீர் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பது பற்றி லூனா–25 ஆய்வு செய்யும் என்றும் 2021ஆம் ஆண்டே விண்கலத்தை ஏவ திட்டமிட்டு, பல்வேறு காரணங்களால் தாமதம் ஏற்பட்டதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

"வரலாற்றில் முதல்முறையாக நிலவின் தென் துருவத்தில் விண்கலம் தரையிறக்கப்படவுள்ளது. தற்போதுவரை எல்லோரும் நில நடுக்கோட்டு மண்டலத்திலேயே தரையிறக்கியுள்ளனர்" என்று ரஷ்யாவின் ரொஸ்கொஸ்மோஸ் விண்வெளி ஆய்வு நிறுவன அதிகாரி அலெக்சாண்டர் புளொகின் தெரிவித்துள்ளார்.

1800 கிலோ எடை கொண்ட லூனா–25 விண்கலம் நிலவின் தென் துருவப் பகுதியில் தரையிறங்கி நிலவின் மேற்பரப்பில் உள்ள பனிக்கட்டிகள், கனிமங்கள், எரிபொருள் ஒட்சிசன், குடிநீர் போன்றவற்றை ஆய்வு செய்ய இலக்காக கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

## ஹவாய் காட்டுத் தீயினால் உயிரிழப்பு 53 ஆக உயர்வு



அமெரிக்காவின் ஹவாய் தீவில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 53 ஆக உயர்ந்துள்ளது. மயுய் என்ற இடத்தில் ஏற்பட்ட காட்டுத் தீ காரணமாக ஆயிரத்து 700க்கும் அதிகமான கட்டடங்கள் நெருப்பில் எரிந்து நாசமாகின.

வரலாற்று நகரமான லஹைனா 80 வீதம் அழிந்துவிட்டதாக ஹவாய் மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 36 ஆக இருந்த நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த 17 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். இந்நிலையில் ஹவாய் காட்டுத் தீ பெரும் இயற்கைப் பேரழிவு என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

தொடர்ந்து எரிந்து வரும் நெருப்பு காரணமாக 11 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அடிக்கடி காட்டுத் தீயால் பாதிக்கப்படும் கலிபோர்னியாவில் இருந்து ஹவாய்க்கு மீட்பு மற்றும் தேடுதல் வேட்டைக்கு குழுக்களை அனுப்புவதாக கலிபோர்னிய ஆளுநர் தெரிவித்துள்ளார். கடந்த புதன்கிழமை ஏற்பட்ட இந்த காட்டுத் தீ, அருகில் ஏற்பட்ட புயலால் தீவிரம் அடைந்து வேகமாக பரவியுள்ளது. இதில் குடியிருப்பாளர்கள் உயிரை காப்பதற்கு கடலில் குதிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

கனடாவில் தொடர்ந்து காட்டுத் தீ பரவி வருவதோடு தென்மேற்கு அமெரிக்காவில் பாரிய வெப்ப அலை பாதிப்பு ஏற்பட்டு வட அமெரிக்காவில் இந்த கோடை காலத்தில் கடுமையான காலநிலை நிலவிய சூழலேயே இந்த காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது.

ஐரோப்பா மற்றும் ஆசியாவின் பல பகுதிகளிலும் கடுமையான வெப்பம் பதிவான நிலையில் பாரிய காட்டுத் தீ சம்பவங்கள் மற்றும் வெள்ளப்பாதிப்புகள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நைகரில் இராணுவத் தலையீட்டுக்கு பிராந்திய நாடுகளிடையே இணக்கம்



இராணுவ சதிப்புரட்சி இடம்பெற்ற நைகர் நாட்டின் மீது முடியுமான விரைவில் இராணுவ தலையீடு ஒன்றை மேற்கொள்ள மேற்கு ஆபிரிக்க நாடுகளிடையே இணக்கம் எட்டப்பட்டதாக ஐவரி கோஸ்ட் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பிராந்திய தலைவர்களின் கூட்டத்தில் தயார்நிலை இராணுவப் படை ஒன்றை கூட்டுவதற்கு இணக்கம் எட்டப்பட்டுள்ளது. படைகளை பயன்படுத்துவது கடைசி தீர்வாக இருக்கும் என்று நைஜீரிய ஜனாதிபதி போலா டினுபு தெரிவித்துள்ளார்.

நைகரில் கடந்த ஜூலை 26 ஆம் திகதி இராணுவம் ஆட்சியை பிடித்தது.

இதனையடுத்து பதவி கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதி மொஹமட் பசூம் இரண்டு வாரங்களுக்கு மேல் வீட்டுக் காவலில் இருக்கும் நிலையில் அவரது உடல் நிலை பற்றி அமெரிக்கா மற்றும் ஐக்கிய நாடுகள் சபை கவலை வெளியிட்டுள்ளன. இந்நிலையில் மேற்கு ஆபிரிக்க நாடுகளின் கூட்டத்திற்கு பின்னர் பேசிய ஐவரிகோஸ்ட் ஜனாதிபதி அலசன் அவுடாரா கூறியதாவது, அரசியலமைப்பு ஒழுங்கை மீட்டெடுப்பதற்கு அந்த ஆபிரிக்க நாட்டின் மீது இராணுவ தலையீடு மேற்கொள்ளவதாக தெரிவித்துள்ளார்.

இதற்கு ஐவரிகோஸ்ட் 850 தொடக்கம் 1,100 படையினரை வழங்கும் என்றும் நைகர் மற்றும் பெனின் நாட்டு படையினரும் நிலைநிறுத்தப்படவுள்ளனர் என்றும் அவுடாரா கூறினார்.

எந்த ஒரு இராணுவ தலையீட்டுக்கும் எதிராக செயற்படப்போவதாக நைகரின் இராணுவ ஆட்சியாளர்கள் எச்சரித்துள்ளனர். நைகரில் மீண்டும் ஜனநாயகத்தை கொண்டுவர பிராந்திய நாடுகள் கடந்த ஒகஸ்ட் 6 ஆம் திகதி வரை கெடு விதித்தபோதும் அது நிறைவேற்றப்படவில்லை.

## பிரான்ஸ்–இந்திய நட்பை மேம்படுத்த புதிய திட்டம்



இந்தியாவுக்கும் பிரான்ஸுக்கும் இடையிலான நீண்ட கால நட்புறவை மேம்படுத்தும் வகையில் புதிய முன்முயற்சிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இம்முன்முயற்சிகளை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ள பிரான்ஸ், 2030 ஆம் ஆண்டுக்குள் 30 ஆயிரம் இந்திய மாணவர்களை வரவேற்கும் இலக்கை கொண்டுள்ளதாகவும் இத்திட்டத்தின் கீழ் முதுமாணி பட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட பட்டம் கொண்டுள்ளவர்களும் குறைந்தது ஒரு கற்கை தவணைக்காக பிரான்ஸில் தங்கி இருக்கும் இந்திய மாணவர்களும் ஐந்து வருட கால குறுகிய ஷெங்கன் விசாவுக்கு தகுதியுடையவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் இந்தியாவிலுள்ள பிரான்ஸ் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில், கல்வி அடைவுகளும், கலாசார ரீதியான புரிதல்களும் இரு நாடுகளுக்கிடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்த உதவும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரான்ஸின் சர்வதேச வகுப்புகள் முறை இந்திய மாணவர்கள் தங்கள் கற்கையில் சிறந்து விளங்கவும் பிரான்ஸ் கல்வி முறைக்கு இலகுவாக மாறவும் பெரிதும் உதவும். இத்திட்டத்தின் கீழ் பிரஞ்சு மொழி உள்ளிட்ட ஏனைய கல்விப் பகுதிகளில் முழுமையான பயிற்சி அளிக்கப்படும்.

## அமெரிக்கா – ஈரான் இடையே கைதிகள் பரிமாற்ற உடன்பாடு



அமெரிக்காவும் ஈரானும் கைதிகள் பரிமாற்றம் தொடர்பில் உடன்பாடு செய்து கொண்டுள்ளன.

அமெரிக்காவில் உள்ள ஈரானியக் கைதிகள் ஐவரும், ஈரானில் உள்ள அமெரிக்கக் கைதிகள் ஐவரும் பரிமாற்றிக் கொள்ளப்படுவர் என்று டெஹ்ரானின் இர்னா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

தடுத்து வைக்கப்பட்டிருந்த அமெரிக்கர்கள் அனைவரும் இரட்டைக் குடியுரிமை வைத்திருக்கும் ஈரானிய வம்சாவளியினர். அவர்கள் டெஹ்ரானில் உள்ள ஒரு ஹோட்டலில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிகிறது.

கைதிகள் விடுவிக்கப்படுவது ஆக்கபூர்வமான நடவடிக்கை என்றும் அவர்களைத் தாயகம் அழைத்து வர இன்னும் அதிகம் செய்ய வேண்டும் என்றும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அன்ட்டனி பிளிங்கன் கூறினார்.

கைதிகள் பரிமாற்ற உடன்பாட்டுக்காக ஏற்கனவே உள்ள தடைகளில் இருந்து ஈரான் எந்த விலக்கும் பெறாது என்பதை அவர் தெளிவுபடுத்தினார்.

## பாலைவனத்தில் திமிங்கில எச்சம்



திமிங்கில மூதாதைகள் நிலத்தில் இருந்து கடலுக்கான நகர்வை பூர்த்தி செய்த 41 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய அழிவுற்ற திமிங்கில இனங்களின் எச்சங்களை எகிப்தில் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

எகிப்தின் பயூம் ஒசில் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் இந்த இனங்களுக்கு 'டுட்செட்டஸ் ராயனென்சிஸ்' என்று ஆய்வுக் குழுவினர் பெயரிட்டுள்ளனர்.

எட்டு அடி நீளம் கொண்ட சுமார் 187 எடையுடையது என்று மதிப்பிடப்படும் இந்த திமிங்கிலம் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகச் சிறிய திமிங்கில இனமாக உள்ளது.

"முழுமையான நீர் சார் வாழ்க்கை முறை ஒன்றுக்கு மாறுவதன் முதல் கட்டத்தின் பதிவு கண்டுபிடிக்கப்பட்டிருப்பது மிக முக்கியமானதாகும்" என்று கெய்ரோவில் உள்ள அமெரிக்க பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இந்த ஆய்வுக் குழுவின் தலைவர் ஹெஷாம் சலம் தெரிவித்துள்ளார்.

## 'பார்பி' திரைப்படத்திற்கு லெபனான், குவைட் தடை




உலகத் திரையரங்குகளில் பெரும் வசூலை அள்ளி வரும் 'பார்பி' திரைப்படத்திற்கு லெபனான் மற்றும் குவைட் நாடுகள் தடை விதித்துள்ளன.

அது ஓரினச் சேர்க்கையை ஆதரிப்பதாகவும் சமய விழுமியங்களுக்கு எதிராக இருப்பதாகவும் லெபனானின் கலாசார அமைச்சர் முகமது மொர்ததா கூறினார். லெபனானை அடுத்து குவைட்டும் அந்தத் திரைப்படத்திற்குத் தடை விதித்துள்ளது. மேலும், 'டோக் டு மீ' எனும் திகில் திரைப்படத்தையும் அது தடை செய்துள்ளது.

பொது நன்னெறிக் கோட்பாடுகளையும் சமூகப் பாரம்பரியங்களையும் பாதுகாக்க அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அந்நாட்டு ஊடக அமைச்சு குறிப்பிட்டது.

மத்திய கிழக்கு நாடுகளில் எல்.ஜி.பி.டீ சமூகத்தினருக்குப் பாதுகாப்பான சூழல் நிலவிய முதல் அரேபிய நாடான லெபனானில் இப்போது நிலைமை மாறியுள்ளது.

அமைச்சர் மொர்ததாவுக்கு ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் சைத் ஹசன் நஸ்ரல்லாவின் ஆதரவு உள்ளது. ஆயினும் கடந்த மாதம், ஓரினச் சேர்க்கையை ஆதரிக்கும் அனைத்தையும் தடைசெய்வது உள்ளிட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்று நஸ்ரல்லா கூறியிருந்தார்.

# பாடசாலைகளுக்கான மேலதிக நீர் கட்டண சுமையை அரசே ஏற்கும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாடசாலைகளுக்கு அத்தியாவசியமாக உபயோகப்படுத்தப்படும் நீரை இலவசமாக வழங்கவும் மேலதிகமாக பயன்படுத்தப்படும் நீருக்கு கட்டணம் அறவிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

எவ்வாறெனினும், பாடசாலைகளுக்கான நீர் கட்டண சுமை எவர் மீதும் சுமத்தப்பட மாட்டாதெனவும், அமைச்சர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக பாராளுமன்றத்தில் நேற்று தயாசிறி ஜயசேகர எம்.பி. எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவித்த போது,

"பாடசாலைகளில் நீர் கட்டணத்தை அறவிடாமல் இருப்பதற்கு நாம் ஏற்கெனவே தீர்மானித்தோம். அதன் பின்னர், நீர் கட்டண திருத்தத்தையடுத்து அத்தியாவசியமாக உபயோகப்படுத்தும் நீரின் அளவை இலவசமாக விநியோகிக்கவும் அதற்கு மேலதிகமாக உபயோகிக்கப்படும் நீருக்கு கட்டணம் அறவிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு



நாம் அறிவுறுத்தல்களை வழங்கவுள்ளோம்.

அடுத்தபடியாக, இந்த மட்டுப்படுத்தப்பட்ட கட்டணம் அதிகரித்துச் செல்லுமானால், அதற்காக அடுத்த வருடம் வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் ஒருதொகை நிதியை மாகாண மட்டத்தில் ஒதுக்குவதற்கு நான் யோசனையை முன்வைக்கவும் தீர்மானித்துள்ளேன். இதனால், அந்த சுமை எவர் மீதும் சுமத்தப்பட மாட்டாது. அரச நிதியிலிருந்தே அது வழங்கப்படுமெனவும், அமைச்சர் தெரிவித்தார்.

# நீதித்துறையை சிதைத்து அரசை வீழ்த்த சில NGOக்கள் முயற்சி

## வெளிநாடுகளில் இயங்குவதாக அமைச்சர் பிரசன்ன குற்றச்சாட்டு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நீதித்துறையை சிதைத்து அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு சில அரசசார்பற்ற அமைப்புகள் வெளிநாடுகளில் இருந்துகொண்டு கங்கணம் கட்டிக்கொண்டு செயற்படுவதாக, ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட யோசனையொன்றை நீதிமன்றம் சவாலுக்கு உட்படுத்த முடியாதென்ற சபாநாயகரின் அறிவிப்பு தொடர்பாக நேற்று சபையில் நடைபெற்ற காரசாரமான வாத விவாதங்களுக்கு பின்னர் அது தொடர்பாக கருத்துகளை முன்வைத்த போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவித்த போது,

"இந்த விடயம் தொடர்பாக சபாநாயகர் செயற்பட்டுள்ள விதம், மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாக பலரும் சபையில் கருத்துகளை முன்வைத்துள்ளனர்.

நீதிமன்றம் ஒரு உத்தரவை பிறப்பித்து அதை விலக்கிக்கொண்டமை, சபாநாயகர் வழங்கிய உத்தரவை அடிப்படையாகக் கொண்டு அல்லவென்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன். அவ்வாறு நீதிமன்றத்தால் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.



இந்த விவகாரத்தை வைத்து இதனை வேறு கோணத்தில் கொண்டு செல்ல சில தரப்பினர் முயற்சிக்கின்றனர். பாராளுமன்றம் நீதிமன்றத்துக்கு அழுத்தம் கொடுக்கின்றதென்ற போர்வையில் இதனை முன்னெடுக்கப் பார்க்கின்றனர்.

அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு அரசசார்பற்ற அமைப்புகள் சில வெளிநாடுகளிலிருந்து கங்கணம் கட்டிக்கொண்டு செயற்பட்டு வருகின்றன எனும் கூற்றும் முன்வைக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், ஒரு சமயம் பாராளுமன்றத்தில்

06

# பாராளுமன்றில் சபாநாயகரின் தீர்ப்பை சவாலுக்கு உட்படுத்த முடியாது

## தேவையெனில் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரலாம் - அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாராளுமன்ற சம்பிரதாயங்களுக்கமைய சபாநாயகரின் தீர்ப்பை சவாலுக்குட்படுத்த முடியாதென்பதுடன், அவ்வாறு சவாலுக்குட்படுத்த வேண்டுமாயின், சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையே கொண்டுவரப்பட வேண்டுமெனவும், அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

கடன் மறுசீரமைப்பு தொடர்பாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட யோசனையை நீதிமன்றம் சவாலுக்குட்படுத்த முடியாதென சபாநாயகர் விடுத்த அறிவிப்பு தொடர்பாக நேற்றும் சபையில் வாத விவாதங்கள் நடைபெற்றதுடன், இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக நடைபெற்ற வாத விவாதங்களின் போது, எம்.பி.க்கள் பலரும் தமது கருத்துகளை முன்வைத்தனர். அந்த வகையில், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அது தொடர்பாக தெரிவித்த போது,

"சபாநாயகரின் மேற்படி அறிவிப்பை தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவிருந்த வழக்கை நீதிமன்றம் இரத்து செய்து விட்டது. எனினும், இது எதிர்காலத்துக்கு தவறான எடுத்துக்காட்டாக இருப்பதை தவிர்த்துக்கொள்ளும் வகையில் வழங்கிய அறிவிப்பை சபாநாயகர் மீளப் பெற்றுக்கொள்ள வேண்டும்" என்றார்.

இதனைத் தொடர்ந்து கருத்து முன்வைத்த தயாசிறி ஜயசேகர எம்.பி.,

"பாராளுமன்ற நிலையியல் கட்டளையை பாதுகாக்க வேண்டிய சபாநாயகர் அதை மீறியுள்ளார். ஒரு விடயம் தொடர்பாக நீதிமன்றம் தீர்ப்பு அல்லது அறிவுறுத்தலை வழங்கியதன் பின்னர் சபாநாயகர் பாராளுமன்றத்தினூடாக அடுத்த கட்ட நடவடிக்கையை எடுக்க முடியும்.

முன்னாள் சபாநாயகர் அநுர பண்டாரநாயக்க இவ்வாறான ஒரு விவகாரத்தின் போது சிறந்த முறையில் செயற்பட்டிருந்தார்.

கடந்த 09ஆம் திகதி சபாநாயகர் விடுத்த அறிவிப்பை தொடர்ந்து, சட்டவாக்கத்துறைக்கும் நீதித்துறைக்குமிடையில் முரண்பாடுகள் தோற்றம் பெறுமென்ற நிலைப்பாட்டில் உயர் நீதிமன்றம், ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பான வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமல் நீக்கியுள்ளது.

ஆகவே, நீதிமன்றத்துக்கு அழுத்தம் பிரயோகிப்பது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்" எனத் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷமன் கிரியெல்ல, "சபாநாயகரை நோக்கி கடந்த 09ஆம் திகதி நீங்கள் விடுத்த அறிவிப்பில் முன்னாள் சபாநாயகர் அநுர பண்டாரநாயக்கவின் அறிவிப்பை சுட்டிக்காட்டினீர்கள். நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு பின்னரே அப்போதைய சபாநாயகர் அநுர பண்டாரநாயக்க பாராளுமன்றத்தில் அறிவிப்பை விடுத்தார்.

தீர்ப்புக்கு முன்னர் அவர் பாராளுமன்றத்தில்

06

# பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வளர்க்க இந்திய புதிய பிரதி உயர்ஸ்தானிகர் உறுதி



**ஸாதிக் ஷிஹான்**

இலங்கைக்கான இந்தியாவின் புதிய பிரதி உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி சத்யாஞ்சல் பாண்டே, பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டையில் அமைந்துள்ள பாதுகாப்பு அமைச்சில் நேற்று (11) இந்தச் சந்திப்பு நடைபெற்றது. புதிய பிரதி உயர்ஸ்தானிகரை பாதுகாப்புச் செயலாளர் வரவேற்றதுடன், இருதரப்பு பாதுகாப்பு விடயங்கள் தொடர்பாக சிநேகபூர்வமாக இவர்கள் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும்

06

# தெவட்டகஹா ஜும்மா பள்ளிவாசலுக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் விஜயம்



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள், கொழும்பு 07 இலுள்ள தெவட்டகஹா ஜும்மா பள்ளிவாசலுக்கு நேற்று (11) வருகை தந்தனர். பள்ளிவாசல் தலைவர் றியாஸ் சாலி, கொழும்பு மாநகரசபை முன்னாள் பிரதி மேயர் எம்.டி.எம்.இக்பால் மற்றும் வெளிவிவகார அமைச்சகத்தின் ஒருங்கிணைப்புச் செயலாளர் மொஹமட் முப்லிஹ் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

(படம்: ருஸைக் பாரூக்)

### சிறைச்சாலைகளில் 28,468 கைதிகள் தடுத்து வைப்பு

# போதைப்பொருளுடன் தொடர்புடையோர் 50.3 வீதமானோர் இருப்பதே பாரிய சிக்கல்

## PTA யின் கீழ் 40 கைதிகள் மாத்திரமே சிறையில்

சிறைச்சாலைகளில் சந்தேகநபர்கள் மற்றும் நீதிமன்றங்களால் தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளிகளாக தற்போது 28,468 கைதிகள் இருப்பதுடன், இச்சிறைக்கைதிகளில் 50.3% சதவீதமானவர்கள் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக தண்டனை பெற்றவர்களாக இருப்பதே சிறைச்சாலைகளில் தற்போது பாரிய சிக்கலாகக் காணப்படுவதாக, நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன தெரிவித்தார்.



சில சிறைச்சாலைகளில் அதன் சதவீதம் 65%ஆக இருப்பதாகவும், இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பாக தண்டனை பெறும் இவ்வாறான குற்றவாளிகளுக்கு தண்டனையை வழங்குவது மாத்திரம் போதைப்பொருள் பிரச்சினைக்கு தீர்வாக அமையாதென்று சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர், இவர்களுக்கு திறன் விருத்தி, சுகாதாரம், கல்வி உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் புனர்வாழ்வளிப்பது அவசியமாகுமெனத் தெரிவித்தார். இவ்வாறான செயற்பாடுகளின் மூலமே அவர்கள் தண்டனைக்காலம் முடிந்து விடுதலையானதும் மீண்டும் அதே தவறை செய்வதை தடுக்க முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

மேல் மற்றும் தென்மாகாணங்களில் அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி குற்றச்செயல்களில் ஈடுபட்டு தண்டனை பெறுபவர்களை தனியாக வைத்து மருத்துவ சிகிச்சைகளை வழங்கவும் அவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் (10) நடைபெற்ற ஊடக

06

### ஹொரணையில் 200 ஏக்கர் நிலப்பரப்பில்

# ரூ.18 பில். செலவில் புதிய நவீன வசதிகளுடன் சிறைச்சாலை வளாகம்

சுமார் 200 ஏக்கர் காணியில் நவீன வசதிகளுடன் கூடிய சிறைச்சாலை வளாகமொன்று 18 பில்லியன் ரூபா செலவில் ஹொரணையில் அமைக்கப்படவுள்ளதாக, நீதி மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன தெரிவித்தார்.

ஏற்கெனவே நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் போகம்பறை சிறைச்சாலை ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

பொறளை சிறைச்சாலை அமைந்துள்ள காணியின் வர்த்தகப் பெறுமதி 32 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும். இந்த நிலைமையை கருத்திற்கொண்டு ஹொரணையில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான 200 ஏக்கர் காணி சிறைச்சாலை திணைக்களத்துக்காக சுவீகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த இராஜாங்க அமைச்சர்,

06

# புலிகளின் பணம், ஆயுதங்களை தேடிச்சென்ற நால்வர் கைது!

## அதிநவீன ஸ்கேனிங் இயந்திரங்களும் சிக்கின

விடுதலைப் புலிகளால் மறைத்து வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் தங்கம், பணம் மற்றும் ஆயுதங்களை தேடுவதற்காக அதிநவீன ஸ்கேனிங் இயந்திரங்களுடன் சென்ற சந்தேகநபர்கள் நால்வரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக கிளிநொச்சி விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின்படி இந்த நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாதம்பை, கண்டி, நாத்தாண்டியா, மீதெனிய ஆகிய பகுதிகளில் வசிக்கின்ற 30 வயது முதல் 38 வயதுடையவர்களே கைது செய்யப்பட்டுள்ளதாக



விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த நால்வரும் காரொன்றில் நவீனரக அன்டனாக்கள், பற்றரிகள், பற்றரி சார்ஜர்கள், உதிரிப்பாகங்கள், வெளிநாட்டு தயாரிப்பு ஸ்கேனர் என்பவற்றை எடுத்துச் சென்ற போது, கனகபுரம் பிரதேசத்தில் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

06

# இலங்கைக்கு கடத்தவிருந்த 200Kg கடலட்டைகள் பறிமுதல்

## தேவிபட்டினத்தில் இருவர் கைதாகினர்

**திருச்சி எம். கே, ஷாகுல் ஹமீது**



இந்தியாவின் தேவிபட்டினத்திலிருந்து இலங்கைக்கு கடத்துவதற்காக 200 கிலோகிராம் கடலட்டைகளை பதுக்கி வைத்திருந்த சந்தேகநபர்கள் இருவரை தமிழ்நாட்டு வனத்துறையினர் கைது செய்துள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டம், தேவிபட்டினத்தில், இலங்கைக்கு கடத்துவதற்காக சிலர் கடலட்டைகளை பதுக்கி வைத்திருப்பதாக வனத்துறையினருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து, தேவிபட்டினம் வடக்கு மாரியம்மன் கோயில் தெருவில் வனத்துறையினர் நேற்று முன்தினம் (10) அதிகாலை

06

# ரூ. 07 கோடி மின் கட்டணத்தில் ரூ. 20 மில். செலுத்தப்பட்டது

## பதுளை ஆஸ்பத்திரிக்கு மின்சாரம் மீளிணைப்பு

பதுளை போதனா வைத்தியசாலையில் நிலுவையிலிருந்த சுமார் 7 கோடி ரூபா மின்சாரக் கட்டணத்தில் 20 மில்லியன் ரூபாவை அவ்வைத்தியசாலை நிர்வாகம் செலுத்தியதை தொடர்ந்து, வைத்தியசாலையில் துண்டிக்கப்பட்ட மின்சார விநியோகத்தை மீள வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுமார் 7 கோடி ரூபா நிலுவையிலுள்ள மின்சாரக் கட்டண விபரம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட போதும், அதை செலுத்தாத காரணத்தால் வைத்தியசாலையின் மருத்துவ விடுதி, தாதியர் பயிற்சிப்பிரிவு, தாதியர் தங்கும் விடுதி ஆகியவற்றின் மின்சாரத்தை



துண்டிக்க மின்சாரசபை நேற்று முன்தினம் (10) காலை நடவடிக்கை எடுத்தது.

எவ்வாறாயினும், நேற்று முன்தினம் பிற்பகல் வைத்தியசாலை நிர்வாகம் 20 மில்லியன் ரூபாவை செலுத்தியதாகவும் மீதித் தொகையை ஒரு வாரத்துக்குள் செலுத்துவதாக எழுத்து மூலம்

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆடி மாதம் 27ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 முஹர்ரம் பிறை 24

## குறள் தரும் சிந்தனை



கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும்

அறிந்து கொள்ளாதவற்றையும் அறிந்தவர் போல ஒருவர் போலித்தனமாகக் காட்டிக்கொள்ளும்போது, அவர் ஏற்கனவே எந்தத் துறையில் திறமையுடையவராக இருக்கிறாரோ அதைப் பற்றிய சந்தேகமும் மற்றவர்களுக்கு உருவாகும்.

# விவசாயிகளை பலிக்கடாக்களாக்க எதிரணி மேற்கொள்ளும் முயற்சி!

நாட்டில் மீண்டுமொரு அமைதியின்மையைத் தோற்றுவிப்பதற்கு எதிரணியினர் பெருமுயற்சி மேற்கொண்டு வருவது நன்றாகவே தெரிகின்றது. நாட்டில் தற்போது நிலவுகின்ற வரட்சியான காலநிலையை வாய்ப்பாகப் பயன்படுத்தி அமைதியற்ற நிலைமையொன்றை உருவாக்குவதே எதிரணியினரின் தற்போதைய திட்டமாக உள்ளதென்பது புரிகின்றது. இது தொடர்பாக அரசாங்கத் தரப்பினருக்கு புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் வரட்சி ஏற்பட்டுள்ளமைக்கு அரசாங்கத்தைக் குறை கூறுவது வேடிக்கையானதாகும். 'பானையில் இருந்தால்தான் அகப்பையில் வரும்' என்றொரு பழமொழி உள்ளது. அதற்கிணங்க குளத்தில் நீர் இருந்தால்தான் விவசாயத்துக்குத் தேவையான தண்ணீரை வழங்க முடியும். குளத்தில் எஞ்சியிருக்கின்ற கொஞ்சநஞ்சம் தண்ணீரையும் விவசாயத்துக்கு வழங்கினால் மக்களுக்குக் குடிப்பதற்கே தண்ணீர் இல்லாமல் போய்விடுமென்று அரசாங்கம் நினைப்பதில் நியாயம் உள்ளது.

விவசாயம் என்பது பிரதானமானதென்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஆனாலும் குடிப்பதற்கான தண்ணீர் அதனைவிட முக்கியமானதென்பதையும், மின்னுற்பத்திக்கான தண்ணீரும் அத்தியாவசியமானதென்பதையும் மக்கள் புரிந்து கொள்வர். இருந்த போதிலும் நாட்டின் விவசாயிகளைக் குழப்பி விட்டு தாங்கள் நன்மை அடைவதற்காக எதிரணியினர் மறைமுக நடவடிக்கைகளில் ஈடுபடுவது நன்றாகவே தெரிகின்றது.

விவசாயத்துக்குத் நீர்ப்பாசனம் கிடைக்காமல் தவிக்கும் விவசாயிகளை வீதியில் இறக்கிப் போராட வைத்து 'அரகல' போன்று மீண்டுமொரு அமைதியின்மையை உருவாக்குவதற்கு எதிரணியினர் திட்டமிடுவது தற்போது வெட்டவெளிச்சமாகியுள்ளது. இன்றைய நிலையில் எதிரணியினரின் அரசியல் இலாபத்துக்கு விவசாயிகள் பலிக்கடாக்களாக ஆகிவிடக் கூடாதென்பதே முக்கியமாகும்.

அதாவது விவசாயிகளைப் பயன்படுத்தியவாறு எதிரணியினர் தங்களது குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு முயற்சிக்கின்றனர். இதனை விவசாயிகள் நன்கு புரிந்து கொள்வது அவசியம். நாடு பொருளாதார வீழ்ச்சியில் இருந்து படிப்படியாக மீட்சிபெற்று வருகின்ற இன்றைய நிலையில் வீணான அமைதியின்மையை ஏற்படுத்துவதற்கு இடமளிப்பது புத்திசாலித்தனமாகாது.

முன்னைய அரசாங்க காலத்தின் போது எமது நாட்டின் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனரென்பது மறுக்க முடியாத உண்மை. அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட தவறான ஆலோசனைகளின் விளைவாகவே விவசாயத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் அன்றைய காலத்தில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன என்பது வெளிப்படையான விடயம். இதன் காரணமாக விவசாய விளைச்சலில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டதுடன், உணவுப்பொருட்களுக்குப் பெரும் பற்றாக்குறையும் ஏற்பட்டது நினைவிருக்கலாம்.

இலங்கையில் விவசாயத்துக்கான இரசாயன உரப் பாவனை கடந்த அரைநூற்றாண்டுக்கு மேலாக உள்ளது. அரைநூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தில் இயற்கை விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வந்தது. ஆனால் சனத்தொகை பலமடங்கு அதிகரித்ததன் காரணமாக விவசாய நிலங்கள் அதிகரிக்கத் தொடங்கின. அதிக தொகை விளைச்சலை எதிர்பார்க்க வேண்டியிருந்தது. விவசாய நிலங்களை அதிகரிப்பதால் மாத்திரம் பயன் ஏற்படவில்லை. விளைச்சலை அதிகரிப்பதற்கான மாற்று ஏற்பாடுகளும் அவசியமாகின.

அதுமாத்திரமன்றி, தொடர்ச்சியான பயிர்ச்செய்கையினால் நிலத்தின் வளமும் குன்றிப் போனது. இவ்வாறான நிலையிலேயே இரசாயனப் பசளைகள் விவசாயத்தினுள் உட்புகுந்தன. யூரியா உரத்தின் வருகையைத் தொடர்ந்து விதம்விதமான இரசாயனப் பசளைகள் விவசாயத்தை ஆக்கிரமித்தன. காலப்போக்கில் இரசாயனப் பசளைகள் இல்லாமல் விவசாயமே இல்லையென்ற நிலைமை உருவாகியது.

இவ்வாறான நிலையில் விவசாயத்திலிருந்து இரசாயனப் பசளையை ஒரேநாளில் தடை செய்வதென்பது புத்திசாலித்தனமான தீர்மானமாக இருக்கவில்லை. ஆனால் அவ்வாறான முடிவுதான் அன்றைய அரசாங்கத்தில் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இரசாயன உரத்தை உடனடியாகத் தடை செய்ததன் விளைவாக விளைச்சல் முற்றாகவே பாதிக்கப்பட்டது. அன்றைய காலத்தில் விவசாயிகள் வீதிக்கு வந்து போராட வேண்டிய நிலைமையும் உருவாகியது.

அன்று ஆட்சி மாற்றம் ஏற்பட்டதற்கு விவசாயிகளின் போராட்டமும் ஒரு காரணம் எனலாம். ஆனால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதற்குப் பின்னர் விவசாயிகளின் பிரச்சினைகள் படிப்படியாகக் குறைவடைந்து வருகின்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் விவசாயிகளின் பிரச்சினைகளை நன்கு புரிந்து கொண்டவாறு தற்போது செயற்பட்டு வருகின்றது. இரசாயனப்பசளைக்கான தடையை இன்றைய அரசாங்கம் நீக்கியுள்ளதுடன், விவசாயிகளுக்கான இரசாயனப் பசளையை வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொண்டிருந்தது.

விவசாயிகளின் பிரச்சினைகளை நன்றாகப் புரிந்து கொண்டவாறே அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. இதன் காரணமாக தற்போது நெல்விளைச்சலும் கணிசமாக அதிகரித்திருக்கின்றது. விவசாய உற்பத்தி அதிகரித்தால் மட்டுமே நாட்டில் உணவுப்பொருட்களின் விலை குறையுமென்பதை மறந்து விடலாகாது.

விவசாயிகளின் சிக்கல்கள் நீங்கி வரும் போது, அவர்கள் மத்தியில் மீண்டும் குழப்ப நிலைமையை ஏற்படுத்து முயற்சிப்பது நல்லதல்ல. எதிரணியினரின் முயற்சிகளுக்கு விவசாயிகள் பலிக்கடாக்களாகி விடக் கூடாது!

editor.tkn@lakehouse.lk

# மார்க்க அறிஞர்கள் 150 பேரை அழைத்து சவுதி நடத்தும் சர்வதேச இஸ்லாமிய மாநாடு

## இன்று ஆரம்பம்





சவுதி அரேபியா இஸ்லாமிய மதவிவகாரங்கள் அமைச்சு 'உலக இஸ்லாமிய நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்தல்' எனும் தொனிப்பொருளில் இன்று 12 ஆம் திகதியும் நாளை13 ஆம் திகதியும் இஸ்லாமிய மாநாட்டை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. இம்மாநாடு மக்கா முக்கர்மாவில் நடைபெறுகின்றது.

மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சுமார் 85 நாடுகளிலிருந்து 150 மார்க்க அறிஞர்களை சவுதி அரேபியா வரவழைத்துள்ளது. உலகெங்கிலும் இருக்கும் இஸ்லாமிய மார்க்க நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி நடைபெறும் இம்மாநாட்டில் பல ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. இலங்கையில் இருந்து இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மூன்று மார்க்க அறிஞர்கள் மக்கா சென்றுள்ளார்கள்.

12, 13 ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கும் இம்மாநாட்டில், உலக இஸ்லாமிய மத நிறுவனங்கள் இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் வழங்கும் பங்களிப்பு, இந்நிறுவனங்களுக்கு மத்தியில் காணப்படும் தொடர்புகள், விட்டுக்கொடுப்பும் சகவாழ்வும், குர்ஆனையும் ஹதீஸையும் பற்றிப் பிடிப்பதன் அவசியம், தீவிரவாதத்தை களைவதில் இஸ்லாமிய நிறுவனங்களின் பங்களிப்புகள், ஒழுக்க சீர்கேடுகளிலிருந்து முஸ்லிம் சமூகத்தை பாதுகாத்தல் போன்ற தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. இம்மாநாட்டை சவுதி அரேபிய மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அவர்களின் வழிகாட்டலில் சவுதி அரேபிய மதவிவகார அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது. உலக முஸ்லிம்களின் கல்விக்கும் கலாசாரத்திற்கும் உறுதுணையாக திகழும் சவுதி அரேபியாவின் இம்மாநாடு சமகாலத்தில் அவசியமான ஒன்றாகும் என்பதில் சந்தேகம் இல்லை.

தற்காலத்தில் ஏற்படும் நவீன பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் இஸ்லாமிய நிறுவனங்களின் பங்களிப்பு மற்றும் மார்க்க அறிஞர்களின் பங்களிப்பு பற்றியும் விரிவாக ஆராயப்படவுள்ளது.

முஸ்லிம்களுக்கு மத்தியில் ஒற்றுமை பேணுதல், இஸ்லாத்தை பிரசாரம் செய்யும் விடயத்தில் சவுதி அரேபியாவின் அனுபவங்கள் போன்ற விடயங்களும் இம்மாநாட்டில் ஆராயப்பட உள்ளன.



அஷ்ஷெய்க்
பௌஸுல் அலவி...
(மதனி), செயலாளர் தாருள் இமான் நிறுவனம்

# கங்குவேலி ஆதிசிவன் ஆலயத்தில் ஆடி அமாவாசை; அகத்திய முனிவர் தீர்த்தமாடிய கங்கையில் தீர்த்தம்

அகத்திய மாமுனிவர் வாழ்ந்ததாக வரலாறு கூறும் பிரசித்தி பெற்ற திருகோணமலை மூதூர் கங்குவேலி திருக்கரசையம்பதி ஆதிசிவன் தேவஸ்தானத்தின் வருடாந்த ஆடி அமாவாசை தீர்த்த உற்சவம் எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை நடைபெற உள்ளது.

ஆடி அமாவாசை தீர்த்தோற்சவத்தின் தத்துவத்தை உணர்த்துகின்ற நிகழ்வான எள்ளுநீர் இறைத்து பிதிர்க்கடன் நிறைவேற்றுவதற்கு சிறப்பு வாய்ந்த இடமாக கருதப்படுகின்ற அகஸ்திய மாமுனிவர் தீர்த்தமாடிய புனித மகாவலி கங்கை கரையில் (வவுணாவில்) தீர்த்தமாட விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முதல் நாள் 15ஆம்திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஆதிசிவன் ஆலயத்தில் இருந்து சிவபிரான் மகாவலி கங்கையை அடைவார். அன்று இரவு மகாவலி கங்கைக்கரையில் அகத்தியர் ஸ்தாபன வரலாறு கூறும் திருக்கரசைப்புராணம் படித்து பயன் சொல்கின்ற நிகழ்வும் ஆன்மீக சொற்பொழிவும் இடம்பெறும்.

மறுநாள் 16 ஆம் திகதி புதன்கிழமை காலை புனித தீமிதிப்பு வைபவமும் சுன்னம் இடித்து ஆடி அமாவாசை தீர்த்த உற்சவமும் இடம்பெறும். தொடர்ந்து அன்னதானம் இடம்பெறும். அன்றைய தினம் இரண்டு மணியளவில் தீர்த்தக் கரையிலிருந்து எழுந்தருளி மீண்டும் அகஸ்தியர் பிரதி செய்து வழிபட்ட அற்புதங்கள் நிறைந்த சிவலிங்க பெருமானை மூலமூர்த்தியாக கொண்ட சிவ ஆலயத்தை சென்றடைவர்.

சகல கிரியைகளும் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஜெயகிருஸ்ண சதீஷ் சர்மா தலைமையிலான சிவாச்சாரியார்களுடன் நடைபெற சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன என்று ஆலய பரிபாலன சபை தலைவர் ஓய்வுநிலை அதிபர் வேலுப்பிள்ளை தவராசா தெரிவித்தார்.



**வரலாறு:**

திருகோணமலை மாவட்டத்தின் கிளிவெட்டி பிரதேசத்திலுள்ள கங்குவேலி எனும் பழம்பெரும் கிராமத்தில் 'அகத்தியர் ஸ்தாபனம்' என்ற அமைப்பு உள்ளது. அந்த அமைப்பினர் அகத்தியர் ஆலயத்தை அமைத்து, அருகில் அகத்தியர் வழிபட்ட ஆதிசிவனுக்கு ஆலயத்தை பல சவால்களுக்கு மத்தியில் அமைத்து வழிபட்டு வருகின்றார்கள்.

தாபனத்தின் தலைவர் ஓய்வுநிலைஅதிபர் வேலுப்பிள்ளை தவராசா , அங்கு இருக்கின்ற அகத்தியர் வழிபட்ட சிவலிங்கம் கல்வெட்டுக்கள் மற்றும் மருத்துவ பல்கலைக்கழகம் போன்ற தடயங்கள் அனைத்தையும் பழைமை குன்றாத வகையில் பேணி வருகின்றார்.

தொடர்ந்து அங்கிருந்து ஐந்து கிலோமீட்டர் சென்றால் காட்டுக்குள்ளே அகத்தியர் ஆடி அமாவாசை தீர்த்தமாடிய மகாவலி கங்கை நதி தீரம் உள்ளது. அங்கு சிவன் ஆலய பீடம் ஒன்று இருக்கிறது .

இங்கு ஆடி அமாவாசை காலத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஒன்றுகூடி விரதம் அனுஷ்டித்து தீர்த்தம் ஆடுவது வழமையாகும். தந்தையரை இழந்த இந்துக்கள் அனைவரும் அன்றைய தினம் பிதிர்கடன் செலுத்தி தீர்த்தமாடி வாழ்வில் உய்வடைய வேண்டுதல் செலுத்துவர்.





விபுலமாமணி
வி.ரி.சகாதேவராஜா...
காரைதீவு

# தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் இணைந்து NG Chapter புதிய தலைமுறை விருது விண்ணப்பங்கள்

The WIM New Generation Chapter (NG Chapter) ஆனது தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் (NYSC) இணைந்து, தொடர்ந்து 4 ஆவது ஆண்டாக பெருமதிப்புமிக்க புதிய தலைமுறை விருதுகளுக்கான (New Generation Awards) விண்ணங்களுக்கான பரிந்துரைகளை ஏற்றுக்கொள்வதை ஆரம்பித்துள்ளது.

இந்த விருதுகள் பாடசாலை மாணவர்கள், பட்டதாரி மாணவர்கள், தொழில்முயற்சியாளர்கள், புத்தாக்குனர்கள், செல்வாக்கு செலுத்துபவர்கள், ஊழியர்கள், விளையாட்டுத் துறையினர், ஊடகங்கள், இளைஞர், யுவதிகள், கலை, விவசாயம், சமூகப் பணியாளர்கள் போன்றவற்றில் கவனம் செலுத்தும் நிறுவனங்கள் உட்பட பல்வேறு பிரிவுகளில் 15 முதல் 30 வயது வரையிலான இளைஞர், யுவதிகளின் மகத்தான சாதனைகளை அங்கீகரித்து கௌரவிக்கின்றன.

இந்த ஆண்டுக்கான புதிய தலைமுறை விருதுகள், 'Daring to Differ' (வித்தியாசமாக இருப்பதற்கான தைரியம்) என்ற தொனிப்பொருளில், இளைஞர்,யுவதிகள் வித்தியாசமாக இருப்பதற்கு அவர்களுக்கு சவால் விடுகின்றது. பிளாட்டினம் அனுசரணையாளராகவும், தொடர்ந்து 3 ஆவது ஆண்டாக முக்கிய கூட்டாளராகவும் 'Sooriya' இந்த நிகழ்ச்சியை முன்னெடுக்கவுள்ளது.

இது தொடர்பில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட ஊடக அறிமுக நிகழ்வில் புதிய தலைமுறை விருதுகளின் 2023 ஆண்டுக்கான நிகழ்வு தொடர்பில் WIM New Generation Chapter இன் தலைவரான கசுன் சிகேரா கருத்து வெளியிடுகையில், "இலங்கையின் மறுமலர்ச்சிக்கு பங்களிக்க உந்துசக்தியாகச் செயற்பட்டு, தொலைநோக்கு இலக்குடன், முன்னோக்கிச் சிந்திக்கும் இளைஞர்,யுவதிகளைக் கொண்ட புதிய அணியை வளர்ப்பதும், அவர்களை அங்கீகரிப்பதும், ஊக்குவிப்பதுமே இந்த நிகழ்வின் நோக்கமாகும்" என்று குறிப்பிட்டார்.



NYSC இன் தலைவரும்/பணிப்பாளர் நாயகமுமான பசிந்து குணரத்ன கருத்து வெளியிடுகையில், "இலங்கையின் குறிப்பிடத்தக்க இளைஞர், யுவதிகள் தேசத்தின் மீட்சி மற்றும் அபிவிருத்தியில் அங்கம் வகிக்கத் துணிந்துள்ளனர். இது நம் அனைவருக்கும் ஒரு உத்வேகம் அளிக்கிறது" என்றார்.

நடுவர்கள் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தி, களனிப் பல்கலைக்கழகத்தின் சந்தைப்படுத்தல் முகாமைத்துவப் பிரிவின் பேராசிரியர் ரவி திசாநாயக்க கருத்து வெளியிடுகையில், "எங்கள் மதிப்பீட்டுச் செயல்முறையின் நோக்கம் வெற்றியாளரைத் தேர்ந்தெடுப்பது அல்ல, மாறாக இலங்கையின் எதிர்காலத்தை வென்றெடுக்கும் ஆற்றல் படைத்த குணாதியசத்தைக் கொண்ட ஒரு வெற்றியாளரை இனங்கண்டு, அவருக்கு அங்கீகாரம் வழங்குவதாகும்" என்று குறிப்பிட்டார்.

New Generation Chapter இன் ஸ்தாபகரான கலாநிதி சுலோச்சனா சேகெரா ஊடக அறிமுக நிகழ்வை நிறைவுசெய்து கருத்து வெளியிடுகையில், "பொருளாதாரத் தலைமைத்துவத்தில் இளைஞர்,யுவதிகளின் தீவிர ஈடுபாடானது தேவையாக மாறியுள்ளதை உணர்ந்து, நாடு முழுவதும் உள்ள தலைவர்கள் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர் இளைஞர்,யுவதிகளின் திறனைப் பயன்படுத்துவதற்கு அணிதிரள்கின்றனர்" என்று குறிப்பிட்டார்.

பெயருக்கான பரிந்துரைகள் 2023 ஒகஸ்ட் 31 வரை பொதுமக்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும். புதிய தலைமுறை விருதுகளுக்கான உத்தியோகபூர்வ இணையத் தளமான www.womeninmanagementawards.org மூலம் விருதுகளுக்கான பெயர்களை சமர்ப்பிக்கலாம். பரிந்துரைக்கப்பட்டவர்கள், துணை ஆவணங்கள் மற்றும் மேற்கோள்களுடன், விருதுக்காக பரிந்துரைக்கப்படுவரின் சாதனைகள் பற்றிய விரிவான தகவல் விபரங்களை வழங்க வேண்டும்.

நடுவர் குழுவில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த மதிப்பிற்குரிய தொழில்துறை நிபுணர்களான பசிந்து குணரத்ன தலைவர் NYSC, பேராசிரியர் ரவி திஸாநாயக்க சந்தைப்படுத்தல் முகாமைத்துவப் பிரிவு, களனிப் பல்கலைக்கழகம், சுதர்ஷன குணவர்தன ITN தொலைக்காட்சியின் தலைவர், கலாநிதி. யசோதா வேலானந்த Inexis Consulting இன் ஸ்தாபகர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் YWayz இன் பணிப்பாளர், ரொஹான் மஸ்கோரல Shippers Academy இன் பிரதம நிறைவேற்று அதிகாரி, ஸாரா அன்சாரி CIMA இன் இலங்கைக்கான முகாமையாளர் மற்றும் தாமரி சேனநாயக்க கொகா கோலா இலங்கைக்கான பொது விவகாரங்கள், தொடர்பாடல் மற்றும் நிலைபேற்றியலுக்கான பணிப்பாளர் ஆகியோர் இதில் அடங்கியுள்ளனர்.

# கமல் படத்தின் கதாநாயகி ஜெயப்ரதாவுக்கு 6 மாதசிறை!

## தொழிலாளரை ஏமாற்றிய குற்றச்சாட்டு நிரூபணம்!

இந்தியாவின் பிரபல நடிகை ஜெயப்பிரதா மீது அரசு தொழிலாளர் காப்பீட்டு கழகம் வழக்கு ஒன்று தொடர்ந்தது. தாம் நடத்திய திரையரங்கில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கான இ.எஸ்.ஐ. பணத்தை அரசு தொழிலாளர் காப்பீட்டு நிறுவனத்துக்கு செலுத்தவில்லை என்பது வழக்கு ஆகும். இந்த வழக்கை விசாரித்த சென்னை எழும்பூர் நீதிமன்றம் நடிகை ஜெயப்பிரதாவுக்கு 6 மாதம் சிறைத் தண்டனை விதித்து நேற்று தீர்ப்பளித்தது.

ஆந்திராவை சேர்ந்த நடிகை ஜெயப்பிரதா இந்திய திரை உலகின் முன்னணி நடிகை. தமிழ் உள்ளிட்ட தென்னிந்திய மொழிகளிலும் பின்னர் இந்தி திரை உலகிலும் கொடிகட்டிப் பறந்தார். கமலுடன் 'சலங்கை ஒலி' என்ற பிரபலமான படத்தில் கதாநாயகியாக நடித்தவர். 1994ம் ஆண்டு முதல் தீவிர அரசியலில் ஈடுபட்டு வருபவர். தெலுங்குதேசம் கட்சி தொடங்கி உ.பியின் சமாஜ்வாதி கட்சி வரை நீடித்தது ஜெயப்பிரதாவின் அரசியல் பயணம்.



2004ம் ஆண்டு லோக்சபா தேர்தலி. உ.பி. ராம்பூர் தொகுதியில் போட்டியிட்டு எம்.பி.யுமானார். 2009 லோக்சபா தேர்தலிலும் போட்டியிட்டு வென்றார் நடிகை ஜெயப்பிரதா.

சென்னையில் அவர் 2 தியேட்டர்களை நடத்தி வந்தார். இந்த தியேட்டர்களுக்கு சொத்துவரி செலுத்தவில்லை என்பதால் ஏற்கனவே தியேட்டர் பொருட்கள் ஜப்தி செய்யப்பட்ட நிகழ்வும் உண்டு. இதே பாணியில் தியேட்டர் ஊழியர்களிடம் இஎஸ்ஐ செலுத்துவதற்கான பணத்தைப் பிடித்தம் செய்திருக்கிறது ஜெயப்பிரதாவின் தியேட்டர் நிர்வாகம், ஆனால் முறையாக இப்பணத்தை அரசு தொழிலாளர் காப்பீட்டுக் கழகத்தில் செலுத்தவில்லை. இதனால் ஜெயப்பிரதா மீது அரசு தொழிலாளர் காப்பீட்டு கழகம் வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கில்தான் தற்போது 6 மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# பயங்கரவாத எதிர்ப்பு, சகிப்புத்தன்மை, சகவாழ்வு புனித மக்காவில் சர்வதேச மாநாடு

சவுதி அரேபியாவின் மக்கா அல்முகர்ரமா நகரில் சர்வதேச மாநாடொன்று நாளை 13 ஆம் திகதியும் 14 ஆம் திகதியும் நடைபெற உள்ளது.

'உலகில் உள்ள மத விவகாரங்கள், பத்வாக்கள் துறைகளுடனான தொடர்பு மற்றும் ஒருங்கிணைப்பு' எனும் தொனிப்பொருளில் 'பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் சகிப்புத்தன்மை சகவாழ்வு' என்ற தலைப்பில் இந்த சர்வதேச மாநாடு இடம்பெறுகின்றது.

இலங்கை உட்பட 85 நாடுகளைச் சேர்ந்த 150 பிரதிநிதிகள் பங்குபற்றும் இச்சர்வதேச மாநாட்டில் இஸ்லாமிய அறிஞர்கள், முப்திகள், உலமாக்கள், புத்திஜீவிகள், அமைச்சர்கள் பங்குபற்றுகின்றனர்.

இச்சர்வதேச மாநாட்டின் நிமித்தம் மக்கா நகரும் அதன் தெருக்களும் வெகுவிமரிசையாக அலங்கரிக்கப்பட்டு புதுப்பொலிவு பெற்றுள்ளன.

இரு புனித மசூதிகளின் பாதுகாவலரான மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அல் சவுத், பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான் மற்றும் இஸ்லாமிய மத விவகார அமைச்சர் கலாநிதி அப்துல் லதீப் ஆல் ஷைக் ஆகியோரின் படங்களைத் தழுவிய பெனர்கள் நகரெங்கிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இரு புனிதஸ்தலங்களின் காவலர் சல்மான் பின் அப்துல் அஸீஸின் விஷேட வேண்டுகோளுக்கிணங்க சவுதி அரேபிய இஸ்லாமிய மத விவகார அமைச்சர் கலாநிதி அப்துல் லதீப் அல் ஷெய்க்கின் நேரடி கண்காணிப்பில் இச்சர்வதேச மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இஸ்லாமிய உலகில் மத விவகார தொடர்பு மற்றும் ஒருங்கிணைப்பு, சகிப்புத்தன்மை மற்றும் மிதமான உறவுகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ள இம்மாடு, சவுதி அரேபிய இஸ்லாமிய விவகாரங்கள், அழைப்பு மற்றும் வழிகாட்டுதல் அமைச்சுக்கும் உலகில் உள்ள பல்வேறு மத நிர்வாகங்கள் ஆகியவற்றுக்கும் இடையில் தகவல் தொடர்புகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளைக் கண்டறிவதற்கான வழிகளைப் பகிர்ந்து கொள்வதற்கும், உண்மையான இஸ்லாமிய மார்க்கத்தை தெளிவுபடுத்துவதற்கும், பயங்கவாதம் வெறுப்பு பேச்சுகள் போன்றவற்றைத் தவிர்த்து சகிப்புத்தன்மை சகவாழ்வு போன்ற நற்பண்புகளுடன் வாழ தத்தமது நாடுகளில் ஏற்பாடுகள் செய்வதற்குமாகும்.

சவூதி அரேபிய எப்போதுமே தனித்துவம் வாய்ந்தது. இஸ்லாம் மற்றும் முஸ்லிம்கள் தொடர்பிலும் முஸ்லிம் அல்லாதவர்களுடன் சகிப்புத்தன்மை சகவாழ்வு போன்ற நற்பண்புகளுடனும் செயற்பட்டு வருகிறது.

சவுதி அரேபியா அன்று தொட்டு இன்று வரை பயங்கரவாதத்தை ஒழிக்கவும் மாற்று மதத்தவர்களுடன் உறவுகளோடும் சகவாழ்வோடும் வாழ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றது. அத்தோடு நில்லாது உலகில் உள்ள இஸ்லாம், இஸ்லாம் அல்லாத தலைவர்கள் அனைவருடனும் உலகில் உள்ள உலமாக்கள், முப்திகள், புத்திஜீவிகளுடனும் சேர்ந்து தொடர்ந்தும் பல நாடுகளில் இவ்வாறான மாநாடுகளை நடாத்தி வருகிறது.

அந்த வகையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக் காலத்தில் இவ்வாறானதொரு மாநாடு இலங்கையிலும் நடத்தப்பட்டது. இலங்கையில் பயங்கரவாதத்தை ஒழிக்க இலங்கை அரசுக்கும் புலனாய்வுத் துறைக்கும் சவுதி அரேபியா பாரிய பங்களிப்பைச் செய்தது.

இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களுக்கு சேவை செய்யவும் தீவிரவாதக் கருத்துக்களைத் தீவிரவாத செயற்பாடுளை எதிர்த்தும் இஸ்லாமிய நாடுகளிடையே ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதிலும் மக்களிடையே சகிப்புத்தன்மை மற்றும் சகவாழ்வின் விழுமியங்களை மேம்படுத்துவதிலும் சவுதி அரேபியா அதன் தீவிர பங்கை தொடர்ந்தும் செய்து கொண்டு தான் இருக்கிறது.

இரு புனிதஸ்தலங்களின் பாதுகாவலர், பட்டத்து இளவரசர், மத விவகார அமைச்சர் ஆகியோர் பயங்கரவாதத்தைத் தூண்டும் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு ஆரம்பத்திலேயே முற்றுப் புள்ளி வைத்து விட்டனர்.



இஸ்லாமிய மத விவகார அமைச்சர் கலாநிதி அப்துல் லதீப் ஆல் ஷைக்

அமைச்சர் அப்துல் லதீப் அல் ஷைக் இஸ்லாமிய விவகார அமைச்சைப் பொறுப்பெடுத்ததில் இருந்து பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கும், சகிப்புத்தன்மை மற்றும் சகவாழ்வைப் பரப்புவதற்கும் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிகள் தேசிய, சர்வதேச அளவில் வலுவான பாராட்டுதல்களைப் பெற்றுள்ளது. சவுதி அரேபியா இஸ்லாமிய நாடுகளிலும் உலக நாடுகளிலும் பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை பயங்கரவாத ஒழிப்பு மத நல்லிணக்கம் அமைதியான அனைவரும் விரும்பக்கூடிய சகவாழ்வு ஆகியவற்றை அடைவதில் பல நூற்றாண்டுகளாக முக்கிய பங்கைக் கொண்டுள்ளது என்பதில் சந்தேகமில்லை. உலக நாடுகளில் உள்ள தீவிரவாதம், மற்றும் பயங்கரவாதத்தை எதிர்த்து மன்றங்கள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தி அதன் ஆபத்துகள் பற்றிய புத்தகங்களை வெளியிடுவது போன்ற அனைத்து விடயங்களையும் தொடர்ந்தும் செய்து கொண்டிருக்கிறது.

அந்த வகையில்தான் நாளையும் நாளைமறுதினமும் புனித மக்கா நகரில் இம்மாநாட்டை ஏற்பாடு செய்து சவூதி அரேபியா நடாத்துகின்றது.

உலகில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும். சமாதானம் மலர வேண்டும் என்பதற்காக உலகில் உள்ள 85 நாடுகளைச் சேர்ந்த உலமாக்கள், முப்திகள் என 150 பேருக்கும் மேற்பட்டவர்கள் பங்குபற்றும் இம்மாநாட்டில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி 3 பேர் கலந்து கொள்கின்றனர்.


இச்சர்வதேச மாநாட்டை புனித மக்காவில் நடாத்தும் சவுதி அரேபிய மன்னருக்கும் இளவரசருக்கும் இஸ்லாமிய விவகார அமைச்சருக்கும் இம்மாநாட்டில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்த ஏற்பாடு செய்த இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் ஹாலித் ஹமூத் அல் கஹ்தானிக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளையும் பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம், இம்மாநாடு சிறப்பாக நடைபெற்று உயர்ந்த இலட்சியங்களையும் இலக்குகளையும் அடைய எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்கிறேன்.



மௌலவி
**எம்.எச். ஷேஹுத்தீன்...**
B.A., (மதனி), பணிப்பாளர்,
அல் ஹிக்மா நிறுவனம், கொழும்பு

---

# அமெரிக்க டொலருக்கு நிகரான பிரிக்ஸ் நாணயம் சாத்தியமா?



## தென்னாபிரிக்காவில் பிரிக்ஸ் உச்சிமாநாடு

அமெரிக்க டொலருக்கு பதிலாக புதிய பிரிக்ஸ் நாணயத்தை (BRICS Currency) வெளியிடப் போவதாக ரஷ்யா அறிவித்துள்ளது. எதிர்வரும் 22 முதல் 24 வரை தென்னாபிரிக்காவின் ஜோகன்னஸ்பேர்க்கில் நடைபெறும் பிரிக்ஸ் கூட்டத்தில் புதிய பிரிக்ஸ் நாணயம் குறித்தும் விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலக வங்கி மற்றும் அனைத்துலக நாணய நிதியம் ஆகியவற்றின் செல்வாக்கிற்கு நிகரான செல்வாக்கு கொண்ட அபிவிருத்தி வங்கி ஒன்றை உருவாக்குவது உட்பட முக்கியமான பல விஷயங்களைப் பற்றி கலந்துரையாடுவதற்காக பொருளாதார வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளின் கூட்டமைப்பு தென்னாபிரிக்காவின் டர்பன் நகரில் கூடுகின்றது.

வேகமாக வளர்ந்துவரும் நாடுகளின் முதல் எழுத்துக்களைக் கொண்டு குறிப்பிடப்படும் சுருக்கப்பெயர் பிரிக்ஸ் (BRICS) ஆகும். பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆபிரிக்கா ஆகியவையே அந்த ஐந்து விரைவாக வளர்ந்து வரும் நாடுகள்.



இம்முறை இவ்விவகாரம் குறித்து விவாதிக்கப்பட மாட்டாது என அதிபர் பதவிக்கு தலைமை வகிக்கும் தென்னாபிரிக்கா கூறினாலும், இந்தச் சந்திப்பில் ரஷ்யா டொலருக்கு எதிரான போக்கை வலுப்படுத்தும் என்பது உறுதி. 44 நாடுகள் எதிர்கால BRICS நாணயத்தைப் பயன்படுத்தும் என்று ரஷ்யா நம்புகிறது, மேலும் பல நாடுகள் BRICS இல் சேர விருப்பம் தெரிவித்துள்ளன.

பிரிக்ஸ் (BRICS summit) நாடுகளின் உச்சி மாநாட்டில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் கலந்து கொள்ளமாட்டார் என தற்போது தென்னாபிரிக்கா அறிவித்துள்ளது.

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆபிரிக்கா ஆகிய 5 நாடுகள் பங்கேற்கும் பிரிக்ஸ் நாடுகளின் 15 ஆவது உச்சி மாநாட்டை நடத்துவதற்குத் தென்ஆபிரிக்கா தயாராக உள்ளது என அதிபர் சிரில் ராமபோசா உறுதிப்படுத்தி உள்ளார்.

கொரோனா பெருந்தொற்று நெருக்கடியின் பின்னர் எல்லா நாடுகளிலுமே மந்தமடைந்திருக்கும் வளர்ச்சியை எப்படி தூண்டுவது மற்றும் அபிவிருத்தி செய்வது பற்றியும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

பிரிக் என்ற சுருக்கப் பெயர் 2001 இல் பயன்பாட்டுக்கு வந்தது. பிரிக்ஸ் உறுப்பினர்கள் அவை அமைந்துள்ள புவிப்பகுதிகளில் குறிப்பிடத்தக்க ஆதிக்கம் செலுத்தும் நாடுகளாகும்.

இந்த நாடுகள் 2009 இலிருந்து உச்சி மாநாடுகளை நடத்தி வருகின்றன. பத்தாவது உச்சி மாநாடு தென்ஆபிரிக்காவில் ஜீலை 2018 இல் நடைபெற்றது.

பிரிக்ஸ் BRICS நாடுகள் உலக மொத்த தேசிய உற்பத்தியில் 21 சதவீதம் பெற்றுள்ளன. கடந்த 15 ஆண்டுகளில் உலக GDP இல் தனது பங்கினை மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. உலக மக்கள் தொகையில் பிரிக்ஸ் நாடுகள் 43 சதவீதத்தை இருப்பிடமாக கொண்டுள்ளன.

பிரிக்ஸ் நாடுகள் இணைந்து சுமார் $ 4.4. டிரில்லியன் அந்நிய இருப்பை பெற்றுள்ளன. சீனாவின் ஷாங்காய் நகரில் பிரிக்ஸின் தலைமை அலுவலகம் செயல்படுகிறது. இதன் உறுப்பினர் நாட்டு அரசாங்கங்கள் ஒன்று சேர்ந்து பிரிக்ஸ் மேம்பாட்டு வங்கி என்ற வங்கியை தொடங்கியுள்ளார்கள். இதற்கு புதிய மேம்பாட்டு வங்கி (The New Development Bank) என்ற பெயரும் உண்டு.

உக்ரைனுக்கு எதிரான ரஷியாவின் படையெடுப்பு தீவிரமடைந்து உள்ள சூழலில், போரைக் கைவிட உலக நாடுகள் பலவும் வலியுறுத்தியுள்ளன. அத்தோடு பல சர்வதேச அமைப்புகளும் கோரிக்கை விடுத்துள்ளன. ஆனால், போர் இன்னமும் நீடித்து வருகிறது.

உக்ரைன் மீது போர் தொடுத்த புடினை கைது செய்யச் சர்வதேச குற்ற நீதிமன்றம் சார்பில் வாரண்ட் பிறப்பிக்கப்பட்ட நிலையில், அதில், தென்ஆபிரிக்காவும் ஓர் உறுப்பினராக உள்ளது. அதனால், புடின் அந்நாட்டில் இருக்கும்போது, அவரை கைது செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டு உள்ளது.

இந்நிலையில், பிரிக்ஸ் நாடுகளின் உச்சி மாநாட்டில் ரஷிய அதிபர் புடின் பங்கேற்க மாட்டார் என தென்ஆபிரிக்க அதிபர் சிரில் ராமபோசா அறிவித்துள்ளார்.

அதற்கு பதிலாக ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் உச்சி மாநாட்டில் பங்கேற்பார் என்றும் ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது. புட்டினுக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

அதேவேளை கருங்கடலில் கப்பல் போக்குவரத்து உக்ரைன் போரின் ஒரு பகுதியாக கருதப்படும் என ரஷ்யா எச்சரிக்கை விடுத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. உக்ரைன் போர் தீவிரமடையும் வேளையில் பிரேசில், இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாட்டில் கலந்துகொள்வது உலகின் முக்கிய கவனத்தைப் பெறுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.



**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

---

# இலங்கை, பாகிஸ்தான் எதிர்கொண்டுள்ள கடன் சிக்கல்களுக்கு சீனாவும் ஒரு காரணம்!



இலங்கையிலும் பாகிஸ்தானிலும் உருவெடுத்த வெளிநாட்டுக்கடன் பிரச்சினைகளுக்கு சீனாவும் ஒரு காரணமென்று சர்வதேச பொருளாதார நிபுணர்கள் பலர் முன்னர் கூறியிருந்தமை நினைவிருக்கலாம். சீனாவிடம் கடன் பெற்றுக் கொண்ட நாடுகளில் இலங்கை மாத்திரமன்றி பாகிஸ்தானும் உள்ளது. பாகிஸ்தான் தற்போது பொருளாதார நெருக்கடியினால் அவதியுறுவதற்கு சீனாவிடம் இருந்து பெற்றுக் கொண்ட கடன்களும் காரணமென்று சொல்லப்படுகின்றது.

உலகில் அதிக நாடுகளுக்கு சீனா கடன் வழங்கியுள்ளது. சீனா வழங்குகின்ற கடன்களுக்கு வட்டித்தொகை அதிகமாகும். இந்த அதிகரித்த வட்டி காரணமாக சீனாவிடம் இருந்து கடன் பெற்றுக்கொண்ட பல நாடுகள் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் திண்டாடுகின்றன. அது மாத்திரமன்றி அந்நாடுகள் பொருளாதார நெருக்கடிக்கும் உள்ளாகியுள்ளன.

இலங்கையானது பொருளாதார நெருக்கடியில் இருந்து தற்போது பெருமளவில் மீண்டுள்ளது. ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுக் கொண்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சீர்திருத்தத் திட்டங்கள் காரணமாக இலங்கை நெருக்கடியில் இருந்து விரைவாக மீண்டு வருகின்றது.

இலங்கையின் நிலைமை இவ்வாறிருக்கையில், பாகிஸ்தானின் நிலைமையோ மிகவும் மோசமாக உள்ளது. பாகிஸ்தானின் பொருளாதாரம் மோசமான வீழ்ச்சி நிலையிலேயே இன்னும் உள்ளது. வற்றிப் போன அந்நியச் செலாவணி இருப்பு, படுபாதாளத்தில் பணமதிப்பு, அதிகரித்த விலைவாசி, அரசின் கடன் நெருக்கடி, அதிகரிக்கும் பயங்கரவாத தாக்குதல்கள், அரசியல் சூறாவளிகள் என்று இன்று பலமுனை பிரச்சினைகளில் பரிதவித்துக் கொண்டிருக்கிறது பாகிஸ்தான்.

டொலருக்கு நிகரான பாகிஸ்தான் ரூபாய் மதிப்பு கடுமையாயகச் சரிந்து விட்டது. பல தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதால் பலர் வேலையிழந்துள்ளார்கள். வெளிநாட்டுக் கடன்கள், அதற்கான வட்டி போன்றவற்றைச் சமாளிக்க மேலும் கடன்கள் என்ற பொறிக்குள் வெகுகாலமாக சிக்கித் தவிக்கிறது பாகிஸ்தான். இவ்வாறான நிலையில் இலங்கை, மாலைதீவு, நேபாளம் போன்ற தெற்காசிய நாடுகளுக்கு உதவியது போன்று மனிதாபிமான அடிப்படையிலாவது பாகிஸ்தானுக்கு இந்தியா உதவி வழங்க முன்வர வேண்டும் என்று சர்வதேச அரசியல் விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

சீனாவிடம் இருந்து அதிக வட்டிக்கு கடன் வாங்கிய இலங்கை தற்போது நெருக்கடியில் இருந்து பெருமளவு மீட்சிபெற்று விட்டது. ஆனால் பாகிஸ்தான் இன்னுமே மீண்டெழவில்லை. அந்நாட்டில் பொருளாதார நெருக்கடி மாத்திரமன்றி தற்போது அரசியல் குழப்பமும் ஏற்பட்டுள்ளது.

## நேபாளம் புத்திசாதுரியமாக பின்வாங்கிக் கொண்டது!



நிலைமை இவ்வாறிருக்கையில், சீனாவில் கடன்பிடியில் சிக்கிக் கொள்ளாமலிருப்பதில் நேபாளம் மிகவும் அவதானமாக உள்ளது. பெருந்தொகையை கடனாக தருவதற்கு சீனா முன்வந்த போதிலும் அதனை ஏற்பதற்குநேபாளம் மறுத்துள்ளது.

**மாலைதீவு, பங்களாதேஷ் போன்ற நாடுகளும் உள்கட்டமைப்பு வளர்ச்சிக்காக சீனாவிடம் கடன் வாங்குவதை தவிர்க்கும் சூழல் தற்போது உருவாகியுள்ளது. சீனா போன்ற வல்லரசு நாடுகளின் உதவி நிரந்தரமான தீர்வைத்தரப் போவதில்லையென்றே பல நாடுகள் கருதுகின்றன!**

இலங்கை மற்றும் பாகிஸ்தான் நாடுகளைப் போன்று பொருளாதார நெருக்கடியில் சிக்கிக் கொள்வதற்கு நேபாளம் விரும்பவில்லை என்பதே இதன் அர்த்தமாகும். சீனாவின் அதிகரித்த வட்டியுடனான கடனைப் பெற்று பாதிக்கப்பட்ட ஏனைய நாடுகளைப் போன்று தானும் பாதிக்கப்பட நேபாளம் விரும்பவில்லை.

இலங்கையிலும் பாகிஸ்தானிலும் பொருளாதார நெருக்கடி உருவாகுவதற்கு மிக முக்கிய காரணம் சீனாவிடம் இருந்து அதிக வட்டிக்கு கடன் வாங்கியதுதான் என்பதே பொருளாதார நிபுணர்களின் கருத்தாகும். தெற்காசிய நாடுகளுக்கு சீனா வழங்கியுள்ள கடன் அளவு 4.7 பில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து 40 பில்லியன் டொலராக உயர்ந்துள்ளது.

பாகிஸ்தானின் வெளிநாட்டுக் கடனில் 10 சதவீதத்திற்கும் அதிகமாக சீனாவால் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வருடத்தின் ஆரம்பத்தில் சீன வெளியுறவு அமைச்சர் வாங் யியின் நேபாளத்துக்கு வருகை தந்திருந்தார். இந்தியாவை தனிமைப்படுத்தி தெற்காசியாவில் 'பெல்ட்ரோட்' திட்டத்தை செயல்படுத்தும் சீனா இதற்காக நேபாளத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியது.

ஆனால் சீனாவிடம் இருந்து மானியங்களை மட்டுமே தங்கள் நாடு ஏற்க முடியும் என்றும் உள்கட்டமைப்பு திட்டங்களுக்கான கடன்களை ஏற்க வாய்ப்பில்லை என்றும் சீன அமைச்சர் வாங்கிடம் நேபாள பிரதமர் ஷெர் பகதூர் தேவ்பா கூறியிருந்தார். மிகவும் பிரபலமான பெல்ட் ரோட் முன்முயற்சியில் முக்கிய ஒப்பந்தம் செய்ய சீனா திட்டமிட்டிருந்த நிலையில், இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்படவில்லை.

இதன் பிறகு இந்தியா வந்த நேபாள பிரதமர் ஷெர் பகதூர் தேவ்பா இரண்டு ஒப்பந்தங்களை இந்தியாவுடன் செய்திருந்தாரரென்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஒப்பந்தங்கள் இருநாட்டு மக்களின் உணவு பரிவர்த்தனை மற்றும் போக்குவரத்து தொடர்பானவை ஆகும். இவ்வாறான நிலையில் நேபாளம் மட்டுமின்றி மாலைதீவு, பங்களாதேஷ் போன்ற நாடுகளும் உள்கட்டமைப்பு வளர்ச்சிக்காக சீனாவிடம் கடன் வாங்குவதை தவிர்க்கும் சூழல் தற்போது உருவாகியுள்ளது.

சீனா போன்ற வல்லரசு நாடுகளின் உதவி நிரந்தரமான தீர்வைத்தரப் போவதில்லையென்றே பல நாடுகள் கருதுகின்றன.

இந்தியா போன்ற ஜனநாயக நாடுதான் உண்மையாகக் கைகொடுத்து உதவ முடியும் என்று பல நாடுகள் எண்ணுகின்றன.

சீனா மற்றும் சீன வணிக வங்கிகளிடம் இருந்து பெற்ற கடன்களை மீளச்செலுத்தத் தொடங்குவதால் பெரும் நெருக்கடியைச் சந்திக்க வேண்டியிருப்பதாக பொருளாதாரத்தில் வீழ்ச்சியுற்ற பாகிஸ்தான் போன்ற நாடுகள் கூறுகின்றன.

பாகிஸ்தான் பொருளாதாரத்தை தவறாக கையாள்வதற்கு சான்று, கடந்த 30 ஆண்டுகளில் அந்நாடு சர்வதேச நாணய நிதியத்திடம் ( IMF) இருந்து 13 கடன்களைப் பெற்றிருப்பதாகும்.

கடனுக்கான நிபந்தனைகளை பாகிஸ்தான் நிறைவேற்றத் தவறியதால் பல கடன்கள் பாதியிலேயே நிறுத்தப்பட்டுள்ளன. கடைசியாக பாகிஸ்தான் பெறுவதாக இருந்த ஐ.எம்.எஃப் கடன் 6 பில்லியன் டொலர் தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறது.

சவூதி அரேபியா போன்ற நாடுகள் பாகிஸ்தானுக்கு கடன் கொடுக்க விரும்பாத நிலையில் பாகிஸ்தான் சீனாவிடம் கடன் பெற்றுள்ளது. சீனாவின் கடன் விதிமுறைகளின் கடுமை அதிகம். ஆனால் அந்த நிபந்தனைகளோடு கடன் பெறுவதற்கு பாகிஸ்தான் பின்வாங்குவதில்லை.

சீனா கடன் கொடுப்பதில் கறாரான நாடு. தனக்கு எங்கு ஆதாயம் கிடைக்கும் என்பதை வைத்து அது கடன் கொடுப்பதை திட்டமிடுகிறது. அடிக்கட்டுமானங்கள் உருவாக்கப்பட்டால் அது தனக்கு நீண்டகால நோக்கில் ஆதாயம் என்றால் சீனா அதன் பொருட்டு கடன் கொடுக்கிறது.

சீன கடன் கொடுக்கும் நாடுகளில் 70% நல்ல கடன் வீதத்தைக் கொண்டிருக்கவில்லை. எனவே சீனா ஒரு நாடு கடன் திருப்பிச் செலுத்த முடியாத போது அந்நாட்டின் சொத்தை, அடிக்கட்டுமானத்தைக் கைப்பற்றுகிறது என்றுதான் பார்க்க வேண்டியுள்ளது. இலங்கையும் அப்படித்தான் சீனாவின் கடன்களால் பாதிக்கப்பட்டது.

**எஸ். சாரங்கன்...**

## செட்டிகுளம் முன்னாள் OICக்கு ...

ஐந்து இலட்சம் ரூபா நட்டஈடு வழங்குமாறும், அவர் உத்தரவிட்டார்.

தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.ஸ்ரீரங்காவை எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு, நீதிபதி உத்தரவிட்டார்.

கடந்த 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் திகதி, பதிவு செய்யப்படாத ஜீப் வண்டியில் மதவாச்சியிலிருந்து செட்டிகுளம் பிரதேசத்துக்கு சந்தேகநபர் பயணித்த போது, செட்டிகுளம் வைத்தியசாலைக்கு முன்பாக ஜீப் விபத்துக்குள்ளானது. மூன்று பிள்ளைகளின் தந்தையான சார்ஜன்ட் (36759) ஜி.உதய ஜெயமினி புஷ்பகுமார விபத்தில் மரணமானா ர். கடமையிலிருந்த அதிகாரி தகவல் தெரிவிக்கும் போது, சார்ஜன்ட் வாகனம் ஓட்டிச் சென்ற போது மரணமானதாக பொய்யான தகவல்களை பதிவு செய்து விசாரணை நிறைவடைந்ததாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்து தொடர்பாக உயிரிழந்த சார்ஜன்ட்டின் மனைவி செய்த முறைப்பாட்டின் பிரகாரம், பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் நடத்திய விசாரணையில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.ஸ்ரீரங்கா விபத்தை ஏற்படுத்தியமை தெரியவந்துள்ளது. சட்ட மாஅதிபர் வவுனியா மேல் நீதிமன்றத்தில் 11 குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்கை தாக்கல் செய்தார்.

குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் எம்.பி.க்கு எதிராக சம்பந்தப்பட்ட விசாரணையில் சாட்சியமளித்த இரண்டு சாட்சிகளை தொலைபேசி மூலம் அச்சுறுத்தியதுடன், சாட்சிகளை வானொன்றில் ஏற்றிச் சென்று வேறிடத்துக்கு அழைத்துச் சென்று சாட்சியமளிக்க வேண்டாமென அச்சுறுத்தல் விடுத்துள்ளமைக்கு எதிராக மார்ச் 28 அன்று பாதிக்கப்பட்டோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

தகவல்களை மறைத்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட பிரதான பொலிஸ் பரிசோதகர் சுகத் ரொஷான் சஞ்சீவ நீதிமன்றத்தில் ஆஜராகி அனைத்து குற்றங்களையும் ஒப்புக்கொண்டார். சம்பந்தப்பட்ட விடயங்களை கருத்திற்கொண்ட நீதிபதி, செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய பிரதம பரிசோதகர் சுகத் ரொஷான் சஞ்சீவவை பணி இடைநீக்கம் செய்ததுடன், இத்தண்டனையும் வழங்கப்பட்டது.

இவ்வழக்கு விசாரணை எதிர்வரும் நவம்பர் 6ஆம் திகதி மீண்டும் நடைபெறவுள்ளது.

## டுபாயில் வேலை பெற்று...

சேர்ந்த 39 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

காத்தான்குடி, நாவற்குடா பிரதேசத்திலுள்ள அவரது உறவினர் வீடொன்றில் இச்சந்தேகநபர் தங்கியிருந்த நிலையில், பணம் கொடுத்து ஏமாற்றமடைந்தவர்கள் அவ்வீட்டை முற்றுகையிட்ட போது, அங்கு பதற்றமான சூழ்நிலை நிலவியது. இந்நிலையில், போலி முகவரை பாதிக்கப்பட்டவர்கள் மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்த போதே, அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர், பிரபல நிறுவனமொன்றின் சந்தைப்படுத்தல் குழுத் தலைவர் எனும் போலி அடையாள அட்டையொன்றை காண்பித்தே பொதுமக்களிடம் பணத்தை பெற்றுக்கொண்டு ஏமாற்றியதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த அடையாள அட்டையை சந்தேகநபர் காட்டி, டுபாய்க்கு குறிப்பிட்ட நிறுவனத்தின் அனுசரணையுடன் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் வேலைவாய்ப்புக்காக அனுப்புவதாக தெரிவித்துள்ளார். இதனையடுத்து சின்ன ஊறணியைச் சேர்ந்த 40 பேர், இப்போலி முகவரிடம் தலா ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாபடி 48 இலட்சம் ரூபா பணத்தை சட்டத்தரணி ஒருவரினூடாக ஒப்பந்தம் செய்துகொண்டு வழங்கியுள்ளனர். இவ்வாறு கிளிநொச்சியின் முழங்காவில், மட்டக்களப்பு, கல்லடி, கொக்கட்டிச்சோலை, வாழைச்சேனை, கொக்குவில் உட்பட பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த பெண்கள் உட்பட 150க்கும் மேற்பட்டவர்கள் இப்போலி முகவரிடம் பணம் வழங்கியுள்ளனர்.

## பாதுகாப்பு ஒத்துழைப்பை... 03ஆம் பக்கத் தொடர்

மேம்படுத்துவதற்கு தனது முழு ஆதரவையும் வழங்குவதாக, கலாநிதி பாண்டே உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, புதிதாக நியமனம் பெற்ற இந்திய பிரதி உயர்ஸ்தானிகரின் எதிர்கால நடவடிக்கைகள் சிறப்பாக அமைய பாதுகாப்புச் செயலாளர் வாழ்த்து தெரிவித்ததுடன், அவரது எதிர்கால முயற்சிகளுக்கு தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளார்.

## பயங்கரவாத தடைச்சட்டத்தின்... 03ஆம் பக்கத் தொடர்

சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே, இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவித்த போது,

"திறைசேரிக்கு சுமை ஏற்படாத வகையில் சிறைச்சாலைகளை பராமரிக்கும் சட்டரீதியிலான கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாக கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அது சமூகத்தில் கருத்தாடலுக்கு உள்ளாகியுள்ள வகையில் பணம் செலுத்தி தனியான சிறைச்சாலை அறைகளை பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பத்தை வழங்கும் வகையிலான நடவடிக்கை அல்ல.

அத்துடன், சிறைச்சாலைகளில் தனியார் தொழிற்சாலைகளை நிறுவி அவற்றில் சிறைக்கைதிகளை தொழில் முயற்சியில் ஈடுபடுத்தும் வேலைத்திட்டம் தொடர்பாக கவனம் செலுத்தியுள்ளதாகவும் அதற்கு 4 நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன" எனத் தெரிவித்தார்.

## ரூ.18 பில். செலவில் ... 03ஆம் பக்கத் தொடர்

அங்கு சிறைச்சாலையை நிர்மாணிப்பதற்கு 18 பில்லியன் ரூபாவுக்கு திட்ட அறிக்கைகளை கோருமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

## புலிகளின் பணம், ... 03ஆம் பக்கத் தொடர்

மீட்கப்பட்ட பொருட்கள் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் விசேட அதிரடிப்படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்ட நால்வரும் மேலதிக விசாரணைக்காக கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## இலங்கைக்கு கடத்தவிருந்த... 03ஆம் பக்கத் தொடர்

கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட போது, சேகுமஸ்தான் (வயது 31), சீனி இப்ராஹீம் (வயது 37) ஆகியோரது வீடுகளில் பதப்படுத்தப்பட்ட கடலட்டைகள் இருப்பதைக் கண்டுபிடித்தனர்.

## ரூ. 07 கோடி மின்... 03ஆம் பக்கத் தொடர்

அறிவித்ததையடுத்து, மின்சார விநியோகத்தை மீள வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

எனினும், முறையான முகாமைத்துவமின்றி வைத்தியசாலை அதிகாரிகள் மின்சாரக் கட்டணத்தை செலுத்தாத காரணத்தால் வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள் கடும்சிரமத்துக்குள்ளாகியுள்ளதாக, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊவா மாகாண இணைப்பாளர் வைத்தியர் பாலித ராஜபக்ஷ தெரிவித்தார்.

## நீதித்துறையை சிதைத்து... 03ஆம் பக்கத் தொடர்

225 உறுப்பினர்களையும் நிராகரிக்கும் நிலை காணப்பட்டது. எனினும், அந்த 225 பேரில் சிலரை ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்திலும் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. கடந்த காலங்களில் நிறைவேற்றுத் துறையை சிதைப்பதற்கும் இவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள். நிறைவேற்றுத்துறை மீது நம்பிக்கை இல்லையெனக் காட்டி அரசாங்கத்தை வீழ்த்தவும் நடவடிக்கை எடுத்தார்கள்.

மீண்டும் இப்போதும் நீதித்துறை மற்றும் நிறைவேற்றுத்துறையை சீர்குலைத்து அரசாங்கத்தை வீழ்த்துவதற்கான சூழ்ச்சிகளையே மேற்கொண்டுவருகின்றனர். அதற்குஇடமளிக்க முடியாது" எனத் தெரிவித்தார்.

## பாராளுமன்றில்... 03ஆம் பக்கத் தொடர்

அறிவிப்புகளை விடுக்கவில்லை. ஆனால் நீங்கள், நீதிமன்றத்தில் ஒரு விடயம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்த நிலையில் பாராளுமன்றத்தின் நிதி அதிகாரத்தை சவாலுக்குட்படுத்த முடியாதென்று அறிவித்தீர்கள்" என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர், பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், "அரசியலமைப்பின் 14ஆவது சரத்தில் மனித உரிமைகள் தொடர்பாக தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் அனைவரும் சமமாக மதிக்கப்பட வேண்டுமென்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## விளையாட்டு பல்கலையை...

ரோஹண திஸாநாயக்க தெரிவித்தார்.

தியகமவிலுள்ள மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு வளாகத்தை அபிவிருத்தி செய்து, விளையாட்டு பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் பாடசாலை மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் திறமையான விளையாட்டு வீர, வீராங்கனைகளை அடையாளம் கண்டு, அவர்களின் திறமைகளை மேம்படுத்த தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க எதிர்பார்த்துள்ளதாகவும், இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (11) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே, இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இளைஞர்கள் தொடர்பாக பாரிய எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் வைத்திருப்பதாகவும் அவர்களின் முன்னேற்றத்துக்காக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

அதன்படி, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் செயற்பாடுகளை பிரதேச ரீதியில் செயற்படுத்த ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் ஒவ்வொரு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் மூலம் இளைஞர், யுவதிகளின் பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டு தீர்வுகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

## கீரிமலை கேணியும் தொல்லியல் ...

அதற்கான கண்டனங்கள் வெளிநாடுகள்வரை சென்று எதிரொலிக்கும் போது, தமது செயற்பாடுகளிலிருந்து திணைக்களம் தற்காலிகமாக பின்வாங்குவதுமாகவும் சைவ மக்கள் தமது அடையாளங்களை ஒன்றன் பின் ஒன்றாக இழந்து வரும் துர்ப்பாக்கிய நிலைக்கு இட்டுச் செல்வதும் மிகவும் கவலைக்குரியது. இவ்வாறான செயற்பாடுகள் முளையிலேயே கிள்ளியெறியப்பட வேண்டும். இப்படியான சமிக்ஞைகளால் அரசாங்கம் சைவத் தமிழ் மக்களின் நம்பிக்கையை பெறுவதற்கான அதன் முயற்சிகளில் பாரியளவில் பாதிப்பு ஏற்படும்.கீரிமலைக் கேணியில், தமது நீத்த உறவினர்களின் பிதிர்க்கடனை நிறைவேற்றுவதற்காக வெளிநாடுகளிலிருந்தும் சைவமக்கள் வந்து செல்கின்ற இடமாக உள்ளது.

ஈழத்தில் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான நகுலேஸ்வரத்தின் அருகில் அமைந்துள்ள இந்தக் கேணி பல நூற்றாண்டு கால பழமை வாய்ந்தது. இது ஒரு நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக வலி. வடக்கு பிரதேச சபையால் நிர்வகிக்கப்பட்டு வருகின்ற இடம்.

சைவத் தமிழ் மன்னன் இராவணனோடும் இராமாயணத்தோடும் தொடர்புடைய திருக்கோணேஸ்வர ஆலய சுற்றாடலில் வெளியார் ஆக்கிரமிப்பு, கன்னியா வெந்நீரூற்று தொடர்பாக தொல்லியல் திணைக்களத்தின் தலையீடு, அண்மையில் பறளாய் முருகன் கோயிலிலுள்ள ஒரு அரச மரத்தை பற்றிய சர்ச்சை, வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் அழிக்கப்பட்டமை, பின்னர் அதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட சர்ச்சைகளென சைவ மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்கின்றன.

எனவே, இத்தகைய அநீதியான செயலை தடுத்து நிறுத்துவதுடன், சிறுபான்மை மக்களின் மத வழிபாடுகளை தடுக்கின்ற செயற்பாடுகளை கட்டுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.

நாங்கள் எந்த மதத்துக்கும் எதிரானவர்கள் அல்லர். ஆனால், எமது மத வழிபாட்டை தடை செய்ய எவருக்கும் உரிமையில்லை. அத்தகைய செயற்பாடுகளை தடுக்க வேண்டுமென்று ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் கேட்டுக்கொள்வதாகவும், அகில இலங்கை இந்து மாமன்றம் தெரிவித்தது.

## தேசிய நீரோட்டத்தினுள்...

ஆகியோருடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (11) நடைபெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில், மலையகத் தமிழ் மக்களுக்கே உரித்தான பிரச்சினைகள் மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளால் ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, 200 ஆண்டுகளுக்கும் மேலாக நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த மலையகத் தமிழ் மக்கள் பாடுபட்டதாகவும் இன்றும் நாட்டின் பொருளாதாரத்தை முன்னெடுப்பதில் அவர்கள் முக்கிய பங்காற்றுவதாகவும் தெரிவித்தார். 1983 கலவரத்தின் பின்னரும் அந்த மக்கள் பிரிவினைவாத போக்குகளையோ அல்லது ஆயுதம் ஏந்திய பயங்கரவாத செயற்பாடுகளையோ கைக்கொள்ளவில்லை. மாறாக அவர்கள் இலங்கை அரசாங்கத்தின் மீதும் தெற்கு சமூகத்தின் மீதும் நம்பிக்கையுடன் செயற்பட்டதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மலையகத் தமிழ் மக்களுக்கு இலங்கை குடியுரிமை வழங்குவதற்காக ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டத்தை நிறைவு செய்வதற்காக அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானுடன் இணைந்து பிரதமரென்ற வகையில் 2003ஆம் ஆண்டில் செயற்பட்டதையும் ஜனாதிபதி நினைவுகூர்ந்தார்.

அத்துடன், மலையக தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான திட்டமிட்ட வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் நோக்கில் மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி,

அந்த மக்களை தொடர்ந்தும் மலையகத் தமிழர்களாகவோ அல்லது தோட்டப்புற மக்களாகவோ வாழ வைப்பதற்கு பதிலாக இலங்கை சமூகத்தில் ஏனைய மக்களுடன் ஒன்றிணைப்பதே தமது எதிர்பார்ப்பெனத் தெரிவித்தார்.

தற்போதும் பெருந்தோட்டங்களிலிருந்து கொழும்புக்கு வந்த குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மக்கள் சமூகத்தில் உள்வாங்கப்பட்டுள்ள போதிலும், அனைத்து மக்களையும் சமூகத்துடன் ஒன்றிணைக்கும் சவாலை வெற்றியடையச் செய்வதில் அந்த மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகளுக்கு விசேட பங்களிப்பை ஆற்ற முடியுமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

## ஜனாதிபதி ரணில் மிகவும்...

பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது வரட்டுக் கௌரவத்தை விட்டு விட்டு இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அப்போதே மாற்றமொன்றை ஏற்படுத்த முடியுமென, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (11) ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இதில் இ.தொ.கா. பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான், மருதபாண்டி ராமேஷ்வரன் எம்.பி, இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான், " மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தோம். இந்தியாவின் 3 ஆயிரம் மில்லியன் ரூபாவை எப்படி பயன்படுத்த வேண்டுமென்பது தொடர்பாகவும் எடுத்துரைத்திருந்தோம்.

அத்துடன், காணி உரிமை தொடர்பாகவும் பேசப்பட்டது. இதற்கான பொறுப்பு எனக்கும் அமைச்சர் ரமேஷ் பத்திரணவுக்கும் வழங்கப்பட்டுள்ளது. மலையகத்தில் ஏற்கெனவே நிர்மாணிக்கப்பட்டுள்ள 44 ஆயிரம் வீடுகளுக்கு காணி உரித்து வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு அவசியமென்ற விடயமும் வலியுறுத்தப்பட்டது. ஆனால், இது நிரந்தர தீர்வு அல்லவெனவும் மக்களுக்கு உரிய வருமானம் கிடைப்பதற்கான பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டுமெனவும் நாம் சுட்டிக்காட்டினோம். நாட்டில் பல மாவட்டங்களில் மலையக மக்கள் வாழ்கின்றனர். சில பகுதிகளில் தமிழ் பிரதிநிதித்துவம் இல்லை. எனவே, சிங்கள எம்.பி.க்கள் உள்ளடங்கலாக அனைத்து மலையக எம்.பி.க்களையும் பேச்சுக்கு அழைக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தோம்.

பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகளை ஒரு திட்டவரையாக ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்போம். ஏனெனில், விவாதத்தில் உரையாற்றிய அனைவரும் மலையக மக்களின் உரிமைகளை வலியுறுத்தியிருந்தனர்.

மலையகம் 200 நிகழ்வு தவறென சிலர் கருதினால், நடைபயணமும் தவறுதான். மலையக மறுமலர்ச்சிக்காக குழுவொன்றை அமைத்துள்ளோம். சுயாதீன மானவர்கள் அதில் உள்ளனர். மலையக மக்களுக்காக தமது வரட்டுக் கௌரவத்தை விட்டு, மேம்பாட்டு திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க மலையக தலைவர்கள் முன்வர வேண்டும்" என்றார்.

## 'டைனமைற்' மூலம் மீன்பிடிப்பதை...

அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

டைனமைற்களை (ஜெல் வோட்டர்) பயன்படுத்தி மீன் பிடிப்பதால் ஏராளமான மீன் வளங்கள் அழிவடைவதாகவும் இதனை தடுப்பதற்கு துரித நடவடிக்கையை எடுக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமக்கு ஆலோசனை வழங்கியிருப்பதாகவும் அதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பாக கலந்துரையாடுவதற்காக இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர், இந்த விடயம் தொடர்பாக அமைச்சரவைக்கு அறிவிப்பதற்காக அமைச்சரவைப் பத்திரமொன்றை தயாரிக்குமாறும் அமைச்சின் செயலாளர் இந்து ரத்நாயக்க உள்ளிட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

டைனமைற் பயன்படுத்தப்படுவதால் திருகோணமலை, கற்பிட்டி, மன்னார் மற்றும் தென்பகுதியிலும் கடல் வளம் அழிக்கப்படுவதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், இந்த விடயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு மற்றும் மாவட்ட செயலாளர்களுக்கு அறிவிக்குமாறும் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

"டைனமைற் பயன்படுத்துவோருக்கான விநியோக மார்க்கங்களை தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய வழிமுறைகள் தொடர்பாக தமக்கு அறிவிக்குமாறும் இதனை தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய சுற்றிவளைப்புகள் தொடர்பாக கடற்படை மற்றும் சிவில் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு உரிய ஆலோசனை வழங்க வேண்டும்" எனத் தெரிவித்தார். இதற்கான உரிய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக கடற்றொழில் சட்டமூலம் மற்றும் சுடுகலங்கள், வெடிபொருட்கள் தடுப்பு கட்டளை சட்டத்தின் கீழ் உரிய நடவடிக்கை மேற்கொள்ள முடியுமெனவும் குறித்த சட்டங்களில் இதனை தடுப்பதற்கான வழிமுறைகள் இல்லாவிடில் புதிய சட்டமூலங்களை தயாரிக்க முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

டைனமைற் பயன்படுத்துவதால் அழிவடையும் மீன்களை இனங்காண்பதற்கு நாரா நிறுவனத்தில் போதுமான அதிகாரிகள் இல்லையெனில், சுற்றிவளைப்புகளில் ஈடுபடும் கடற்றொழில் திணைக்களத்தின் பிராந்திய அதிகாரிகளுக்கு அறிவித்து இம்மீன்களை இனங்காண்பதற்கான திட்டங்களை வகுக்குமாறும் அதற்குரிய நிதியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு அவர் ஆலோசனை வழங்கினார்.

இந்தக் கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து ரத்நாயக்க, கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த, அமைச்சின் மேலதிக செயலாளர் தம்மிக ரணதுங்க, பொலிஸ் திணைக்கள சுற்றாடல் பிரிவு பொறுப்பதிகாரி, கடற்படை மற்றும் சிவில் பாதுகாப்பு துறைகளின் உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## விவசாயத்தை நவீனமயப்படுத்தும்...

நேற்று முன்தினம் (10) நடைபெற்ற சந்திப்பின் போதே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விவசாய நவீனமயப்படுத்தலுக்கான செயலகமொன்றை ஸ்தாபிப்பதற்கான வரைவு மற்றும் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையொன்றை இரு வாரங்களுக்குள் பெற்றுத்தருமாறு அதிகாரிகளுக்கு வலியுறுத்திய ஜனாதிபதி, தேவை ஏற்படுமாயின் அச்செயற்பாடுகளுக்காக பாராளுமன்றக் குழுவொன்றை நியமிக்க முடியுமெனவும் தெரிவித்தார்.

விவசாயம் இந்நாட்டு பொருளாதாரத்தின் பிரதான அங்கமாக காணப்படுகிறதென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதனை அமைச்சு அல்லது சில நிறுவனங்களுக்குள் மாத்திரம் மட்டுப்படுத்த முடியாதெனவும் அரச மற்றும் தனியார்துறைகள் உரிய ஒருங்கிணைப்புடன் விவசாயத்தை நவீனமயப்படுத்தும் பணிகளை முன்னெடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

அதேபோல் பழமையான முறைமைகளுக்கு மாறாக, புதிய முறையில் சிந்தித்து சிறந்த பிரதிபலன்களை அடையும் வகையில், விவசாயத்தை நவீனமயப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இதுவரையில் விவசாயத்துக்கான நிதி ஒதுக்கீடுகள் மாத்திரமே இடம்பெற்றதாகவும் அதனால், நாட்டுக்கு எவ்வித பலன்களும் கிடைக்கவில்லையெனவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, உரிய முகாமைத்துவத்தின் கீழ் விவசாயத் திட்டமிடல்களை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

நெல் மற்றும் ஏனைய பயிர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் விவசாய அபிவிருத்தித் திட்டத்தை செயற்படுத்துவதற்கான அறிவுரைகளை வழங்கிய ஜனாதிபதி, 9 மாகாணங்களிலும் காணப்படும் வளங்களை அதற்காக பயன்படுத்திக்கொள்வதுடன், அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது, உரிய அமைச்சுகள் மற்றும் பல்கலைக்கழகங்கள், ஏனைய ஆய்வு நிறுவனங்களின் நிபுணத்துவ தெரிவுகளை பெற்றுக்கொள்ளுமாறும் அறிவுறுத்தினார்.

அந்தந்த போகங்களுக்கு ஏற்ற நெல் வகைகளை பயிரிடுதல், குறித்த பயிர்கள் தொடர்பாக நிபுணத்துவம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து அறிவைப் பெறுதல், தரமான விதைகளை கொள்முதல் செய்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் நாடு பூராகவுமுள்ள கமநல சேவைகள் நிலையங்களினூடாக சிறு விவசாயிகளுக்கு அவசியமான நவீன தொழில்நுட்ப அறிவை வழங்கும் திட்டத்தை உருவாக்குமாறும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன், நவீன விவசாய உபகரணங்களை உற்பத்தி செய்யும் தாய்லாந்து போன்ற நாடுகளின் ஆதரவை பெறுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறும் விவசாய அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

விவசாய அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்கு தனியார்துறை தொழில் முயற்சியாளர்களை உள்ளீர்ப்பதன் மூலம் அதிக நன்மைகளை பெற முடியுமென்பதுடன், நிலையான விவசாயத்தை கட்டியெழுப்ப முடியுமெனவும், ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

காலநிலை மாற்றம் தொடர்பான இலக்குகளை அடையும் வகையில் இந்த பணிகளை செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் முறையான நீர் முகாமைத்துவத்தை பராமரிப்பதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி விளக்கினார்.

இதேவேளை, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க கருத்துத் தெரிவித்த போது, ஒவ்வொரு பிரதேசத்துக்கும் உரிய பயிர்களை கிராமப்புற ரீதியில் ஊக்குவித்தல் மற்றும் புதிய தொழில்நுட்பம் தொடர்பாக விவசாயிகளை தெளிவூட்டல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டினார்.

இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்ற அரச மற்றும் தனியார்துறை பிரதிநிதிகளும் தங்களது கருத்துகளையும் ஆலோசனைகளையும் முன்வைத்தனர்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, விவசாய அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க, துறைசார் அமைச்சுகளின் செயலாளர்கள், அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இந்தக் கலந்துரையாடலில் பங்கெடுத்தனர்.

## மலையக எழுச்சிப் பயணம்;...

கூட்டிணைவினால் ஏற்பாடு செய்யப்பட்டு, கடந்த ஜுலை 28ஆம் திகதி இந்த எழுச்சிப் பயணம் தலைமன்னாரிலிருந்து ஆரம்பமாகியது. இன்றைய நிகழ்வில் அனைவரையும் பங்குபெறுமாறு, அதன் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான செங்கன் தேவதாஸன் கேட்டுக்கெண்டார். இது தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவித்த அவர், மலையகம் 200 எழுச்சிப் பயணத்தின் இறுதிநாள் நிகழ்வுகள், மாத்தளை அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலய கல்யாண மண்டபத்தில் இன்றையதினம் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி பல்வேறு நிகழ்ச்சிகளுடன் நடைபெறவுள்ளது" என்றார்.

## கொழும்பு துறைமுகத்தில்...

இந்தக் கப்பல் இன்று (12) நாட்டிலிருந்து புறப்படவுள்ளதாக, இலங்கை கடற்படையினர் தெரிவித்தனர்.

## சட்டத்தரணி பட்டியலிலிருந்து ...

வழங்கியுள்ளது.

மத்திய மாகாண மேல் நீதிமன்றத்தின் பதிவாளர் உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த முறைப்பாட்டின் பிரகாரம், இந்த சட்டத்தரணிக்கு எதிராக விசாரணை நடத்தப்பட்டது.

இதன்படி, 1999 பெப்ரவரி 5ஆம் திகதி இந்த சட்டத்தரணிக்கு எதிராக போலியான ஆவணம் தயாரித்ததன் மூலம் நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றம் இழைத்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பான விசாரணையின் பின்னர், பிரதிவாதிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதையடுத்து, சட்டத்தரணியின் பெயரை சட்டத்தரணிகள் பட்டியலிலிருந்து நீக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## யோஹானிக்கு USA இல்...

புகைப்படம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

தெற்காசிய மரபுரிமைகள் மாதத்தை கொண்டாடும் வகையில் இந்த புகைப்படம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

தமக்கு இது மகிழ்ச்சியை அளிப்பதாக தெரிவித்த யோஹானி, இலங்கையின் கலாசாரமும் இசையும் அமெரிக்காவில் கொண்டாடப்படுவதை காண்பதற்கு ஆவலுடன் காத்திருப்பதாகவும் தெரிவித்தார். கடந்த 2021ஆம் ஆண்டு யோஹானி பாடிய 'மெனிகே மகே ஹித்தே' என்ற பாடல் உலகளவில் பெரும் வரவேற்பை பெற்றிருந்தது.

## அதிக வெப்பநிலை...

அத்திணைக்களம் தெரிவித்தது.

நேற்று முன்தினம் (10) அதிகளவான மழை வீழ்ச்சி மொனராகலை மாவட்டத்தில் பதிவாகியுள்ளது. இதன்படி, மொனராகலை மாவட்டத்தில் 63.7 மில்லிமீற்றர்வரை மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும், வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது. இதேவேளை, நாட்டின் சில பகுதிகளில் நேற்றும் மழையுடனான வானிலை நிலவியதாகவும், வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது. கிழக்கு, ஊவா மாகாணங்களிலும் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் மாலை அல்லது இரவு வேளைகளில் 50 மீல்லிமீற்றர்வரை மழை வீழ்ச்சி பதிவாகக் கூடுமெனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

## போலியான வீஸாவில்...

இவ்வாறு கைது செய்யப்பட்ட இந்த இளைஞருடன் அவரது ஆவணங்கள் அனைத்தும் மேலதிக விசாரணைக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## முட்டையின் விலைகள் ...

70 இலட்சமாக இருந்த போதிலும், நாளாந்த முட்டை உற்பத்தி சுமார் 50 இலட்சமாக இருந்ததாகவும் தற்போது அந்தளவு ஐந்தரை இலட்சமாக அதிகரித்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

முட்டை உற்பத்தி அதிகரிப்பதால், எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் நாட்டின் முட்டை உற்பத்தி உபரியாக இருக்குமெனவும் அதற்கேற்ப நுகர்வோர் சந்தையில் முட்டையொன்றை 25 ரூபா முதல் 30 ரூபாவரை வாங்கலாமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## எட்டாவது மாடியிலிருந்து...

போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். வெள்ளவத்தை, பிரட்ரிக்கா வீதியில் வசிக்கும் 24 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக வெள்ளவத்தை பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்கின் குரல்



## திருக்கோவில், நிந்தவூர் கடலரிப்பை தடுப்பதற்கு கருங்கல்லிலான தடுப்புச் சுவர்

ஒலுவில் விசேட நிருபர்

திருக்கோவில் மற்றும், நிந்தவூர் பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள கடலரிப்பை தடுப்பதற்கு கருங்கல்லிலான தடுப்புச் சுவர் நிர்மாணிக்கப்பட்டு வருவதாக, கடல் ஓரம் பேணல் மற்றும் கடல் மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் எம்.ஐ. ஜெஸூர் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக திருக்கோவில் மற்றும் நிந்தவூர் பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள கடலரிப்பை நிரந்தரமாக தடுப்பதற்கு கருங்கல்லிலான தடுப்புச் சுவர் நிர்மாணிப்பதற்கு கடல் ஓரம் பேணல் மற்றும் கடல் மூல வள முகாமைத்துவ திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இப்பிரதேசங்களில் கடலரிப்பை தடுப்பதற்கு தற்காலிகமாக முதற்கட்டமாக மண் மூடை இடப்பட்டிருந்ததாகவும், நிரந்தரமாக கடலரிப்பை தடுப்பதற்கு கருங்கல்லிலான தடுப்புச் சுவர் நிர்மாணிப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். கடலரிப்பு ஏற்பட்டுள்ளதால் அப்பிரதேசத்தில் வாழும் பொது மக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதோடு பொருளாதாரரீதியாகவும், பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடலரிப்பு தொடர்ச்சியாக ஏற்பட்ட வண்ணம் உள்ளமையால் மீனவர்களின் வாழ்வாதாரம், தென்னந்தோட்டங்கள், வீடுகள் மற்றும் பொதுக்கட்டடங்கள் என்பன கடலரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு ஆகிய பிரதேசங்களிலும் பாரிய கடலரிப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தற்காலிக கட்டடங்களை அகற்ற மகாவலி அமைச்சு நடவடிக்கை

பாசிக்குடா நிருபர்

கோரளைப்பற்று மத்தி பிரதேச செயலகப்பிரிவில் நாவலடி பிரதான வீதியின் அருகிலுள்ள காணிகளைச் சுற்றி அமைக்கப்பட்ட வேலிகள் மற்றும் தற்காலிக கட்டடங்களை கனரக இயந்திர சாதனத்துடன் அகற்றும் பணிகள் பொலிஸ் பாதுகாப்புடன் நேற்று மகாவலி அமைச்சின் அதிகாரிகள் மேற்கொண்டனர்.

இதன்போது பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் கடும் வாக்குவாதமும் கலவரமும் ஏற்பட்டது. நிலமைகளை கட்டுப்படுத்துவதற்கு பெருமளவு பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

பிரதான நாவலடி-கொழும்பு வீதியில் சட்டவிரோதமான முறையில் மகாவலி அமைச்சுக்குரிய சுமார் 28 ஏக்கர் அளவுடைய காணிகளை அபகரித்து வேலிகளை அமைத்து தற்காலிக குடியிருப்புக்களை அமைக்கும் நடவடிக்கையில் ஓட்டமாவடியைச் சேர்ந்த சிலர் கடந்த ஒரு மாத காலமாக ஈடுபட்டு வருகின்றனர். இதனை தடுக்கும் நடவடிக்கையில் பிரதேச செயலக மற்றும் வன இலாகா திணைக்களங்களுக்கு காணி அதிகாரம் இல்லை என்ற காரணம் காட்டி நிர்வாக நடவடிக்கையை மேற்கொள்ள முடியாத நிலை காணப்பட்டது.

இதன் காரணமாக கடந்த 07.08.2023.ஆம் திகதியன்று பிரதேசத்திற்கு வருகை தந்த மகாவலி அமைச்சின் அதிகாரிகள் அவ்விடத்தில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட வேலிகள் மற்றும் தற்காலிகக் கட்டடங்களை அகற்றும்படி பொலிஸாரின் உதவியுடன் தெரிவித்திருந்த போதிலும் அவர்கள் அதனை கவனத்தில் கொள்ளவில்லை. அகற்றுவதற்கான கால அவகாசம் சம்பந்தப்பட்டோரினால் அன்றைய தினம் அதிகாரிகளிடம் வேண்டப்பட்டிருந்தது. எனினும் வழங்கப்பட்ட கால அவகாசம் கடந்த போதிலும் அகற்றுவதற்கான எந்தவித நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை.

இவ்விடயம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கடந்த 6.8.2023. ஆம் திகதியன்று சம்பவ இடத்துக்கு சென்று பொது மக்களுடன் கலந்துரையாடி பின்னர் இவ்விடயம் தொடர்பாக மகாவலி அமைச்சுக்கும் ஜனாதிபதியின் கவனத்திற்கும் கொண்டு வருவதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பூநொச்சிமுனை சுனாமி வீடமைப்பு திட்ட வீதி அபிவிருத்தி பணிகள் மீள ஆரம்பம்



மட்டக்களப்பு குறூப் நிருபர்

பூநொச்சிமுனை சுனாமி வீடமைப்பு திட்ட (பச்சை வீட்டு திட்ட) வீதி அபிவிருத்திப் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த 2021ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சுற்றாடல் அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவருமான நசீர் அஹமதின் சிபாரிசின் பேரில் இவ்வீதி அபிவிருத்திக்கான அனுமதி வழங்கப்பட்டு நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வந்தன.

இருப்பினும் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவினால் இவ்வீதியின் அபிவிருத்திப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. தற்பொழுது அமைச்சர் நசீர் அஹமதின் முயற்சியால் இடைநிறுத்தப்பட்டிருந்த இவ்வீதியின் அபிவிருத்தி செய்யப்படாதிருந்த சுமார் 500 மீற்றர் நீளமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## கிழக்கு மாகாண ஆளுநர்- த.தே.கூட்டமைப்பின் முன்னாள் எம்.பிக்கள் இடையில் சந்திப்பு

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று திருகோணமலையில் நடைபெற்றது.

இச்சந்திப்பு தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் கிழக்கு மாகாண மக்கள் சமகாலத்தில் எதிர்நோக்கிவரும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் ஆளுநருடன் கலந்துரையாடியிருந்தோம், அவற்றில் சிலவற்றுக்கு அவ்விடத்திலேயே செயலாளர்கள் ஊடாக நடவடிக்கை எடுப்பதற்கும் பணித்திருந்தார். பல்லின சமூக நல்லிணக்க விடயங்களில் ஆளுநர் மிக அக்கறை மிக்கவராக காணப்படுகின்றார்.



மேற்படி சந்திப்பில் கிழக்கு மாகாணத்தில் படையினரின் வசமுள்ள காணிகளை விடுவிப்பது, மயிலத்தானமடு மாதவனை பிரதேசத்தில் தொடர்ந்தும் அத்துமீறி அபகரிக்கப்பட்டுவரும் மேய்ச்சல் தரை காணிகள், கிழக்கில் புதிதாக அமைக்கப்படவுள்ள மதுபானசாலைகள், சட்டவிரோதமான மண் அகழ்வு, காணி அபகரிப்புகள், காட்டு யானைகளின் தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் சுட்டிக் காட்டப்பட்டதுடன் இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல் தொடர்பிலும் எம்மால் கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக மட்டக்களப்பு புதுநகரில் விமானப் படையினர் வசப்படுத்தப்பட்டுள்ள வலையிறவு பிரதான வீதியை மீளவும் பொதுமக்களின் பாவனைக்கு விட வேண்டும், தாண்டியடி பிரதேசத்தில் பொலிஸாரினால் அபகரிக்கப்பட்டுள்ள மயான காணி விடுவிப்பு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் போன்ற விடயங்கள் தொடர்பிலும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

அத்துடன் கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் வலயங்களுக்கு மாத்திரம் பாரபட்சமான முறையில் வலயக் கல்வி பணிப்பாளர்களுக்கான ஆட்சேர்ப்பு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளமை தொடர்பிலும் அதனால் கிழக்கில் உள்ள தமிழ் கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் பாதிக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் ஆளுநருக்கு எடுத்துக் கூறினோம்.

இச்சந்திப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சீ. யோகேஸ்வரன், க.கோடீஸ்வரன், ஞா. கிருஷ்ணபிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

சர்வதேச இளைஞர் தினத்தினை முன்னிட்டு

## தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையில் கரப்பந்தாட்ட போட்டி

INTERNATIONAL YOUTH DAY 2023 GREEN SKILLS FOR YOUTH — தினகரன் — தினகரன் வாரமஞ்சரி

சாய்ந்தமருது விசேட நிருபர்

சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினால் தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையில் அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் பீ.எம். றியாத்தின் வழிகாட்டலில் கரப்பந்தாட்ட போட்டி இம்மாதம் 12,13ம் திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 10.00 மணிக்கு அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் அட்டாளைச்சேனை மற்றும் அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள இளைஞர் கழகங்களுக்கிடையில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் அட்டாளைச்சேனை இளைஞர் கழகங்களிலிருந்து 03 இளைஞர் கழகங்களும், அக்கரைப்பற்று பிரதேச இளைஞர் கழகங்களிலிருந்து 03 இளைஞர் கழகங்களும் பங்குபற்றவுள்ளன.

இதில் பங்குபற்றி வெற்றி ஈட்டும் அணியினருக்கு வெற்றி கிண்ணம் மற்றும் விளையாட்டு பொருட்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமது ஷபீர், அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் டீ.எம்.முஹம்மது அன்ஷார் மற்றும் கௌரவ அதிதிகளாக அட்டாளைச்சேனை உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி எப். நஹிஜா முஸாபிர், அக்கரைப்பற்று உதவி பிரதேச செயலாளர் வை.றாஷீத் கலந்து கொள்ளவுள்ளதுடன் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர், மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள், பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாவட்ட இளைஞர் கழக சம்மேளன பிரதிநிதிகள், இளைஞர் கழகங்களின் உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## அமரர் சின்னையா குருநாதனின் நினைவுப் பகிர்தல் நிகழ்வு

அன்புவழிபுரம் தினகரன் நிருபர்

திருகோணமலை ஊடகவியலாளர் அமரர் சின்னையா குருநாதனின் 85 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு அன்பின் பாதையின் எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் 'நானும் குருநாதனும்' எனும் ஒன்றுகூடலும் நினைவுப் பகிர்தல் நிகழ்வு திருகோணமலை நகராட்சிமன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று மாலை 4.00 மணிக்கு நடைபெற்றது.

இந்நிகழ்வு அமைப்பின் தலைவர் கனக.தீபகாந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அமரர் குருநாதன் பற்றி எழுதிய தொகுப்பான ''நானும் குருநாதனும்'' எனும் நினைவேடும் வெளியிடப்படவுள்ளது.



அக்கரைப்பற்று கல்வி வலயத்துக்குட்பட்ட அஸ்ஸிறாஜ் மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) கல்வி கற்பித்து இப்பாடசாலையிலிருந்து வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா உத்தியோகத்தர்களுக்கான சேவை நலன் பாராட்டு விழா பாடசாலை பிரதி அதிபர் எம்.ஐ.அஸ்லம் தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில், பாடசாலையில் சிறப்பாக சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் 13 ஆசிரியர்கள் மற்றும் இரண்டு கல்வி சாரா உத்தியோகத்தர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது. (படம் க்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)





புதிய பாடத்திட்டங்களுக்கு அமைய தரம் 2 மாணவர்களுக்கான மாதிரி புத்தாண்டு நிகழ்வு கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

## மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பின் புதிய நிர்வாகிகள் தெரிவு

கல்முனை விசேட நிருபர்

அம்பாறை மாவட்டம், மாளிகைக்காடு பிரதேசத்தில் மிகவும் சிறப்பாக இயங்கி வருகின்ற ஜனாஸா நலன்புரி அமைப்பின் வருடாந்த பொதுக் கூட்டம் மாளிகைக்காடு சனசமூக நூலகக் கட்டடத்தில் அதன் தலைவர் ஏ.எல். இம்தியாஸ் தலைமையில் கடந்த புதன்கிழமை (09) நடைபெற்றது.

இதன்போது அமைப்புக்கான புதிய நிர்வாகத் தெரிவும் நடைபெற்றது.

தலைவராக ஏ.எல்.எம்.அனுவர், செயலாளராக எம்.ஏ.எஸ்.சுல்பிகார், பொருளாளராக ஏ.எல்.எம். பாயிஸ், உப தலைவராக ஏ.ஆர்.எம். ராபி, உப செயலாளராக ஏ.எல்.எம். பாஹிம், கணக்குப் பரிசோதகராக எம்.ஏ.இக்பால் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் அமைப்பின் காரியாலய பொறுப்பாளர்களாக ஏ.எம்.பஸ்மீர், ஜே.எம்.பாஸீத், நிதிப் பொறுப்பாளராக எம்.ஏ.இக்பால், ஊடகப் பொறுப்பாளர்களாக ஏ.ஆர்.எம். ராபி, என்.எம்.றுஸ்தி, ஜே.எம். ஹஸான் ஆகியோரும் தெரிவாகியுள்ளனர்.

மேலும் அமைப்பாளர்களாக எப்.எம். ரகுபீ, ஏ.எம்.தஸ்மீன், எம்.எம். நபார், ஆகியோரும் போஷகராக யூ.எம்.றியாசும் தெரிவு செய்யப்பட்டனர்.

## மலைச்சாரல்

# இறம்பொடை, புளூபீல்ட் தோட்டத்தில் நீண்டகாலமாக நிலவி வந்த தொழில் பிணக்குகளுக்கு தீர்வு

இறம்பொடை, புளூபீல்ட் தோட்டத்தில் நீண்டகாலமாக நிலவி வந்த தொழில் பிணக்குகளுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் தீர்வு காணப்பட்டுள்ளது.

இதனால் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வேலைக்கு செல்வதற்கு தொழிலாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

இந்நிலையில் இவ்விவகாரம் தொடர்பான கலந்துரையாடலொன்று கடந்த 9 ஆம் திகதி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது.



இறம்பொடை, புளூபீல்ட் தோட்ட தொழிலாளர்கள் பல மாதங்களாக பணி புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர்.

தமக்கான ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி என்பன செலுத்தப்பட வேண்டும், சேவைக் கால கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்பன உட்பட தொழில்சார் உரிமைகளை கோரியே போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி பொது செயலாளர் செல்லமுத்து, புளூபீல்ட் தோட்ட உரிமையாளர், தோட்ட தலைவர்கள் உள்ளிட்டோர் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி என்பவற்றை செலுத்துவதற்கு தோட்ட நிர்வாகம் உடன்பட்டுள்ளது, சேவைக் கால கொடுப்பனவும் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தொழிலாளர்களுக்கு எதிராக சட்டரீதியாக முன்னெடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள் மீளப்பெறப்படும் எனவும் நிர்வாக தரப்பால் கூறப்பட்டுள்ளது.

இதனையடுத்து எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தொழிலாளர்கள் வேலைக்கு செல்வார்கள் என தோட்ட தலைவர்கள் கூறினர்.

அத்துடன், புளூபீல்ட் தோட்ட மக்கள் தொடர்பில் குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு தோட்ட மக்களின் பிரச்சினை, அவர்களுக்கான உரிமைகள் தொடர்பில் தொடர்ந்து அவதானம் செலுத்தும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.



மாத்தளை வீ.டி.நாணயக்கார பூங்காவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இலங்கை சுதந்திர போராட்ட (1848) தியாகி வீரப்புரன் அப்புவின் உருவச்சிலை கடந்த 8ஆம் திகதி பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது. மாத்தளை வீர மொனரவில கெப்பட்டிபொல ஜாதிக அமைப்பின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (படங்கள் ; மாத்தளை சுழற்சி நிருபர்)

## கடும் வரட்சியால் தம்புள்ள - கண்டலம நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் குறைவு

**தம்புள்ள தினகரன் நிருபர்**

கடும் வரட்சியால் தம்புள்ள கண்டலம நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் குறைவடைந்து வருவதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைப்புகள் தெரிவிக்கின்றன.

கண்டலம நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 27,696.75 ஏக்கர் அடிகள் எனவும் தற்போது அது 6219 ஏக்கர் அடிகளாகக் குறைவடைந்து காணப்படுவதாகவும் போவதென்ன நீர்த்தேக்கத்துக்கு பொறுப்பான பிரதம பொறியியலாளரும் நீர்விநியோக முகாமையாளருமான புத்திக்க மகேஸ் நவரத்ன தெரிவித்தார்.

நெல் வயல்கள் பூக்கும் பருவத்தில் வயல்களுக்கு இவ்வாறு நீர்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளமை பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

நீர்விநியோக முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பில் தாம் தமது அதிகாரிகளுடன் இணைந்து கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் பிரதம பொறியியலாளர் புத்திக்க மகேஸ் நவரத்ன தெரிவித்தார்.

நெல் வயல்களைக் காப்பாற்றும் முகமாக விவசாயிகள் தமக்குக் கிடைக்கும் நீரை மிகவும் சிக்கனமாக கையாண்டு தத்தமது விவசாய பயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் பிரதம பொறியியலாளர் விவசாயிகளிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதேவேளை சில பிரதேசங்களில் சட்டவிரோதமாக நீரைப் பெறுவோர் தொடர்பில் தமக்குத் தகவல் கிடைத்து வருவதாக அவர் தெரிவித்தார். நீர் வாழ் மீனினங்களைப் பாதுகாப்பதுடன் வன விலங்குகளுக்கு நீரைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாக கவனம் செலுத்துவதுடன் விவசாய சமூகத்தை பாதுகாக்கும் கடமை தனக்குரிய பாரிய பொறுப்பாகும் எனவும் பிரதம பொறியியலாளர் மேலும் தெரிவித்தார்.

## வேலைத்தள சுகாதாரம், பாதுகாப்பு, விடயங்களில் தொழிலாளர்களின் வகிபாகம்

### கொட்டகலையில் இ.தொ.காவின் ஒரு நாள் செயலமர்வு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பங்களிப்போடு இன்று சனிக்கிழமை கொட்டகலை காங்கிரஸ் தொழில்நிறுவன கேட்போர் கூடத்தில் 'தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை விருத்தி செய்வதன் நன்மைகள்' எனும் தலைப்பில் ஒரு நாள் செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் இ.தொ.கா ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது, வேலைத்தளங்களில் பாதுகாப்பையும், சுகாதாரத்தையும் உறுதிப்படுத்தி உற்பத்தி திறனை சீராக்க அனைவரும் தொழில்சார் பாதுகாப்பு , சுகாதாரம் மற்றும் நலன்களில் அக்கறை கொள்ள வேண்டும். இதனை அடிப்படை நோக்கமாக கொண்டே இச்செயலமர்வு நடைபெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து அனைத்து தோட்டங்களிலும் பயிற்சிகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இச்செயலமர்வுக்கு பிரதம அதிதியாக இ.தொ.கா வின் பொதுச்செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் கலந்து கொண்டு பிரதான உரை நிகழ்த்தவுள்ளார். இ.தொ.காவின் பிரதான சட்ட ஆலோசகரும், சட்டத்தரணியும் கருத்திட்ட பிரதானியுமான கா.மாரிமுத்து இச்செயலமர்வின் குறிக்கோள்களும், இலக்குகளும் எனும் தலைப்பில் அறிமுக உரையை ஆற்றவுள்ளார்.

பிரதேச மட்டங்களிலுள்ள அனைத்து இ.தொ.கா முக்கியஸ்தர்கள், பிரதேச சபை முன்னாள் தலைவர்கள், சிரேஷ்ட உத்தியோகத்தர்கள், மகளிர் இணைப்பதிகாரிகள் ஆகியோர் இதில் பங்குதாரர்களாக பங்குபற்றவுள்ளனர்.

இச்செயலமர்வில் தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமான கலாநிதி சம்பிக்க அமரசிங்க , தொழில்சார் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியப் பிரிவுக்கான தொழில் ஆணையாளர் கலாநிதி எம். பலிப்பான, கண்டி மாவட்ட தொழிற்சாலை பொறியியலாளர் எஸ் ஏ.ஜயசுந்தர, பெருந்தோட்ட மனிதவள அமைப்பின் சுகாதார பிரிவுக்கான பணிப்பாளர் கலாநிதி சரத் அமுனுகம ஆகியோர் விரிவுரையாற்றவுள்ளனர்.

நிறைவாக எதிர்கால வேலைத்திட்டங்களை மலையகத்தில் அமைப்பதற்கான ஒரு விரிவான கலந்துரையாடலை இ.தொ.கா சிரேஷ்ட இயக்குனர் எஸ்.இராஜமணி மேற்கொள்ளவுள்ளார்.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மேற்கொண்டுள்ளதாக ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.





கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கரை சந்திப்பதற்கான வாய்ப்பு இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு அண்மையில் கிடைத்தது. இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம். (படங்கள்: இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

## வடக்கின் உதயம்

## உக்குளான் விலங்கை வேட்டையாடிய இருவர் கைது

**ஓமந்தை விஷேட நிருபர்**



முல்லைத்தீவு முள்ளியவளை பகுதியில் காட்டில் வாழும் உக்குளான் எனப்படும் விலங்கினை சட்டவிரோத துப்பாக்கியால் சுட்டு வேட்டையாடிய இருவர் முள்ளியவளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் (10) இரவு இச்சம்பவம் முள்ளியவளை 3 ஆம் வட்டாரப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மக்கள் செறிந்து வாழும் அப்பகுதியில் பற்றைக்காட்டில் இருந்து சென்ற விலங்கினை சட்டவிரோத துப்பாக்கியால் சுட்டு வேட்டையாடியுள்ளனர். இச்சம்பவத்தின் போது ஹிச்சிராபுரம் மற்றும் முறிப்பு பகுதியைச் சேர்ந்த 30வயதுடைய இருவரை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து மீட்கப்பட்ட வேட்டையாடிய மிருகம் மற்றும் சட்டவிரோத துப்பாக்கி என்பன மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## அதிக வெப்பத்தினால் முதியவர் உயிரிழப்பு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் நிலவும் கடும் வெப்பம் காரணமாக முதியவரொருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார். வடமராட்சி வல்வெட்டித்துறை பகுதியைச் சேர்ந்த சோமசுந்தரம் ஞானமூர்த்தி (வயது 62) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். வீட்டின் குளியலறையில் மயங்கிய நிலையில் காணப்பட்ட நபரை, வீட்டார் மீட்டு, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்த போதும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். அதிக வெப்பம் காரணமாக குருதி ஓட்ட குறைவினால் மரணம் சம்பவித்துள்ளதாக மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வவுனியா இரட்டை கொலை;

## சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியாவை அதிரவைத்த இரட்டை கொலை வழக்கு சம்பவத்துடன் தொடர்புடையதாக கருதப்படும் சந்தேகநபர்களை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதவான் அகமட் ரசீம் நேற்று (11.08) உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த மாதம் 23 ஆம் திகதி அதிகாலை வவுனியா, தோணிக்கல் பகுதியிலுள்ள வீடொன்றில் நுழைந்து தாக்குதல் மேற்கொண்ட சம்பவத்துடன் தொடர்புபட்டவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபர் உட்பட ஆறு பேர் அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

நேற்று இவர்களுக்கு வவுனியா வைத்தியசாலையில் ஆள் அடையாள அணிவகுப்புக்கு திகதியிடப்பட்டிருந்த போதும், சாட்சியின் உடல்நிலை சீர் இல்லாத காரணத்தால் அவர் அங்கு சமூகமளிக்கவில்லை. இந்நிலையில் பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட 6 பேரையும் வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கவும், மீண்டும் 24ஆம் திகதி ஆள் அடையாள அணிவகுப்புக்காக நீதிமன்றில் ஆஜர்படுத்த வேண்டுமெனவும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அத்துடன் பிரதான சந்தேகநபர் சுகயீனம் காரணமாக சிறைச்சாலை வைத்திய அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் தொடர்பில் சட்டத்தரணி அருள்மொழிவர்மன் கொன்சியஸ் ஆஜராகி சந்தேகநபர்களை எவ்வித துன்புறுத்தலுக்கும் உள்ளாகாமல் அவர்களின் நலனில் கவனம் செலுத்துமாறும் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர்.

## உருக்குலைந்த நிலையில் சிசுவின் சடலம் மீட்பு

**பருத்திதுறை விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை பகுதியில் சிசுவின் சடலமொன்று நேற்றுமுன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்படுவதாக தெரியவருகின்றது. அயலவர்களால் சிசுவின் சடலம் அடையாளம் காணப்பட்டு இதுகுறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து சம்பவ இடத்திற்கு பொலிஸார் விரைந்தனர்.

இந்நிலையில் இதுகுறித்து மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் முன்னெடுத்துள்ளதுடன் சட்ட வைத்தியஅதிகாரி சம்பவ இடத்துக்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்தார்.

மேலும் முதற்கட்ட விசாரணையில் சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு அண்மையிலுள்ள கோம்பயன்மணல் மயானப் பகுதியிலிருந்து விலங்குகளால் எடுத்துவரப்பட்டிருக்குமா எனவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.



## நல்லூர் ஆலயத் திருவிழாவில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் தெளிவூட்டல்

**யாழ்.விசேட நிருபர்**

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழா காலத்தில் பக்தர்கள் எல்லோரும் சமம் என்கிற தர்மத்தை பேணுகின்ற வகையில் நடந்துகொள்ளுமாறு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நல்லூர் ஆலயத் திருவிழா காலங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரலாற்று பெருமை மிக்க தமிழர்களின் தலையாய திருக்கோவிலாகிய நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழா இம்மாதம் 21ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 25 நாட்கள் சிறப்பு உற்சவம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இதுதொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் தலைமையில் யாழ். மாநகர சபை மண்டபத்தில் விசேட கலந்துரையாடலொன்றும் நடைபெற்றது. அதன்படி சகல மக்களும் நல்லூர் திருவிழாக் காலங்களில் காலம் காலமாக பின்பற்றுகின்ற ஒழுங்குக் கட்டுப்பாடுகளை பேணவேண்டும். குறிப்பாக, ஆலய வழிபாட்டுக்கு வருபவர்கள் வரலாற்றுப் பண்பாடுகளை பேணக்கூடிய வகையில் சைவ பாரம்பரியமான பண்பாட்டு உடைகளை அணிந்து தெய்வ வழிபாட்டுக்கு வருவதே சாலப்பொருத்தமாகும்.

ஆலய சுற்றாடலில் வேறு விடயங்களுக்கு இடமில்லாத வகையில் ஆன்மீகத்தை மட்டும் நேசிக்கின்ற வகையில் சகலரும் அதற்குரியவர்களாக நடந்துகொள்ளவேண்டும்.

நல்லூர் மகோற்சவ காலம் எமது பண்பாட்டு அடையாளத்தை நிரூபிக்கின்ற காலம். எங்களுடைய அடுத்த தலைமுறையை ஆற்றுப்படுத்துகின்ற காலம். எனவே, கோவிலுக்கு வருபவர்கள் குடும்பம் குடும்பமாக வருகை தந்து பக்திபூர்வமாக வழிபாடு செய்து, கோவில் வீதியில் அமர்ந்து பிரார்த்தனை செய்து மகிழ்ச்சியாக இந்த 25 நாட்களையும் ஒரு தவ வாழ்வாக கருதி வழிபடுங்கள்.

வீண்வார்த்தைகள் பேசாமல், கோவில் வீதியை தெய்விகத்துக்குரிய வீதியாக மாற்றவேண்டிய கடமை பக்தர்களுக்குரியது. எனவே, நல்லூர் உற்சவ காலத்திலே ஆடம்பரமாக ஆபரணங்கள் அணிந்து, நவநாகரிகமாக பக்தர்கள் வருவதை தவிர்த்து, எளிமையாக வழிபாட்டுக்குரிய தோற்றத்தில் வருகைதந்து, அமைதியாக வழிபாடு செய்வதை கருத்திற்கொள்ளுமாறு அன்பாக கேட்டுக்கொள்கின்றேன். ஆலய வீதியில் வாகனங்களை செலுத்தாதீர்கள். அவை ஆயிரக்கணக்கான அடியவர்கள் அங்கப்பிரதட்சணம் செய்யும் வீதிகளாகும்.

என்ன பதவி நிலையை கொண்டவர்களாக இருந்தாலும், எத்தகைய உயர் நிலையை அடைந்தவர்களாக இருந்தாலும், நல்லூர் வீதியில் நடந்து வாருங்கள். இது மிக முக்கியமாகும்.

படித்தவர்கள் உயர் பதவியில் இருப்பவர்கள் முன்மாதிரியாக செயற்பட்டு, நல்லூர் அடியவர்கள் எல்லோரும் சமம் என்கிற தர்மத்தை அனைவரும் பேணுங்கள் என்று அன்பான வேண்டுதலை விடுக்கின்றேன் என்றார்.

## யாழ்ப்பாண மாவட்டத்தில் குடிநீர் இன்மையால் 69,113 பேர் பாதிப்பு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் 69,113 பேர் குடிநீர் இன்மையால் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகுவதாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவி பணிப்பாளர் என்.சூரியராஜ் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள நெடுந்தீவு, ஊர்காவற்துறை, சாவகச்சேரி மற்றும் மருதங்கேணி பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 21 ஆயிரத்து 714 குடும்பங்களைச் சேர்ந்த 69 ஆயிரத்து 113 பேர் குடிநீர் இன்மையால் அசௌகரியங்களை அனுபவித்துவருகின்றனர். இப்பகுதி பிரதேச செயலாளர்களின் கோரிக்கைக்கு அமைவாக அப்பகுதி மக்களுக்கான குடிநீர் விநியோகத்தை முன்னெடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை யாழில் எதிர்வரும் ஓரிரு நாட்களில் மழை பெய்யாவிடின் நிலைமை மேலும் மோசமாகுமெனவும் யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் துறை விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான இம்தியாஸ் பாக்கீர் மார்கார் எழுதிய "சிந்திப்போம்" சித்தமு எனும் சிங்கள மொழிமூலமான நூல் வெளியீட்டு வைபவம் நேற்று முன்தினம் (10) கொழும்பு 7இல் உள்ள இலங்கை மன்றக் கல்லூரியின் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன, எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, சர்வமதத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பேருவளைத் தொகுதி ஆதரவாளர்கள் என நானூற்றுக்கும் மேற்பட்டோர் மண்டபம் நிறைந்து காணப்பட்டனர். இந் நூல் பற்றிய விமர்சன உரைகளை பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி அத்துலசிறி சமரக்கோன், சிரச சிரேஷ்ட ஊடகவியலாளர் சந்தன சூரியபண்டார, இளம் ஊடகவியலாளர் ஹரிந்து உடுவரகெதர, ஆகியோர் உரையாற்றினார்கள்.

(படங்கள்: அஷ்ரப் ஏ சமத்)

### சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தால்

# மாதாமாதம் கௌரவிக்கப்படும் ஆளுமைகளுக்கு "Sun Shine Star" பட்டம், "Trible S" விருது

## கலை ஸ்ரீ கலை மன்றமும் அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியமும் இணைவு

தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் ஊடக அனுசரணைகளுடன் சங்கவி பிலிம்ஸ் நிறுவனம் மாதா மாதம் ஒவ்வொரு ஆளுமைகளை கௌரவிக்கும் நிகழ்வை நடத்திவருகின்றது. இதில் முதலாவதாக கலைஞர் எஸ். என். நடராஜாவும் இரண்டாவதாக கலைஞர் ஜோசப் பர்னாந்துவும் கௌரவிக்கப்பட்டனர்.

எதிர்வரும் 30ஆம் திகதி மூன்றாவது ஆளுமை கௌரவிக்கப் படவுள்ளார். இந்நிகழ்வு வழமைப்போல் கொழும்பு 11, புறக்கோட்டை, ஐந்துலாம்பு சந்தியிலுள்ள கொழும்பு பழைய நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. துரைராசா சுரேஷை




தலைவராகக் கொண்டு இயங்கும் சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்துடன் B S P கலைஞரீயை தலைவராகக் கொண்டு இயங்கும் கலைஸ்ரீ கலை மன்றமும் S. விஜேராஜை தலைவராகக் கொண்டு இயங்கும் அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியமும் இணைந்து மாதா மாதம் இவ்விழாவை நடத்தவுள்ளன. மாதா மாதம் நடைபெறும் இவ்விழா இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமரின் முன்னிலையில் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விழாவில் கௌரவிக்கப்படும் ஆளுமைகளுக்கு "Sun Shine Star" என்ற கௌரவ பட்டத்துடன் "Trible S" விருதும் சான்றிதழும் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. கௌரவிக்கப்படும் ஆளுமைகள் பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்படுவர்.

# செமிகண்டக்டர் உற்பத்தியில் ஈடுபடும் தனியார் நிறுவனங்களுக்கு ஊக்குவிப்பு

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் அமெரிக்க விஜயத்தின்போது அவர் அமெரிக்க அதிபருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளில் செமி கண்டக்டர் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டதாகவும் பின்னர் முக்கிய தொழில்நுட்ப நிறுவனங்களுடன் வட்ட மேசை பேச்சுவார்த்தை நடைபெற்றதாகவும், எதிர்காலத்தில் அமெரிக்காவும் இந்தியாவும் தொழில்நுட்ப கூட்டுறவை கட்டியெழுப்பும் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

குஜராத் காந்தி நகரில் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற செமிகண்டக்டர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய வெளியுறவு அமைச்சர், உலகின் ஐந்தாவது பெரும் பொருளாதார நாடான இந்தியா இப்போது மூன்றாவது இடத்தை நோக்கி நகர்வதாகவும் இதன் பொருட்டு மேம்பட்ட செமிகண்டக்டர் உற்பத்தியில் உள்ளூர் நிறுவனங்களை ஈடுபடுத்தும் வகையில் ஊக்குவிப்புகள் செய்யப்படுவதாகவும் சொன்னார்.

மிக முக்கியமான மற்றும் புதிதாக உருவாகும் தொழில்நுட்பங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதன் மூலம் இந்தியாவுக்கு உலக அளவில் முக்கிய இடம் கிடைக்கும் என்பதை தன் உரையில் சுட்டிக்காட்டிய வெளியுறவு அமைச்சர், தொழில்நுட்ப வர்த்தகம் என்பது வெறுமனே வர்த்தகம் மாத்திரமல்ல, அது ஒரு அரசியல் அறிவியலுமாகும் என்று குறிப்பிட்டார்.

அமெரிக்காவுடன் இந்தியா நெருக்கமாக செயற்பட்டு வருவதால் நாஸாவுடன் இஸ்ரோ உறுதியான உறவை பேண முடிந்திருப்பதோடு இரு நாடுகளுக்கு இடையில் பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் பலம்பெற்று வருவதாகவும், அமெரிக்காவுடன் இந்தியா செமிகண்டக்டர் தயாரிப்பு தொடர்பான ஒப்பந்தம் செய்திருப்பதாகவும் ஜெய்சங்கர் தன் உரையில் தெரிவித்தார்.

# திபெத்திய தம்பதியினரின் திபெத் விடுதலை போராட்ட வரலாற்று கண்காட்சி

இந்தியாவிலும் உலகெங்கும் வாழும் திபெத்தியர்கள் சுதந்திர திபெத்துக்கான தமது போராட்டத்தை கைவிட்டுவிடக் கூடாது என்பதால் தான் தாம் 'ஷெடோ சர்கஸ்' என்ற பெயரில் திபெத் ஆவண கண்காட்சியை நடத்தி வருவதாக திரைப்பட இயக்குநர் ரிட்டு சரினும் அவருடைய கணவர் டென்சிங் சொனமும் தெரிவித்துள்ளனர்.

1940 களில் திபெத்தில் சீனக் குடியேற்றங்கள் ஆரம்பமான நிலையில் திபெத்திய கெரில்லா இயக்கம் தாக்குதல்களை ஆரம்பித்து விட்டதாகவும் 1969 வரை சி.ஐ.ஏ.வின் ஆதரவோடு திபெத்திய கெரில்லாக்களின் போராட்டம் தொடர்ந்து 1947 வரை நீடித்ததாகவும் தகவல் தரும் இவர்கள், திபெத்தியர்களின் இந்த உரிமைப் போராட்டம் மறக்கடிக்கப்படாமல் இருந்தால் மட்டுமே வெற்றி கிட்டும்வரை போராட்டத்தைத் தொடரலாம் என்பதை சுட்டிக் காட்டியுள்ளனர்.

இக் கண்காட்சியில், திபெத்தின் சீன ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டங்கள், தாக்குதல்கள் தொடர்பான புகைப்படங்கள், கடிதங்கள், பொருட்கள் மற்றும் ஆவணங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இயக்குநரின் தந்தையான லாமோ டிஸரிங் 1940 முதல் திபெத்தில் நடைபெற்ற சீன எதிர்ப்பு போராட்டங்கள் தொடர்பான எல்லா ஆவணங்களையும் சேகரித்து வைத்திருப்பதாகவும் அவரது மரணத்தின் பின்னர் அவற்றைத் தொகுத்து காட்சிப்படுத்தியதாகவும் இவர் கூறியுள்ளார். தலாய்லாமா தற்போது வசிக்கும் தர்மசாலாவை இவர் பிறப்பிடமாகக் கொண்டவர்.

திபெத்தியரின் போராட்டம் தற்போது உலகக் கவனத்தை இழந்திருந்தாலும் இந்தியாவின் இளைய தலைமுறையினர் மற்றும் திபெத்தியர் மத்தியில் இப் போராட்டத்தை உயிர்ப்புடன் வைத்திருக்க வேண்டும் என இத் தம்பதியினர் கூறுகின்றனர்.

# ஊக்கத்தொகை குறைப்பு, சம்பளத்தில் வெட்டு திண்டாடித் தவிக்கும் சீன அரசு ஊழியர்கள்

## தேசிய பொருளாதார வீழ்ச்சியின் பின் விளைவுகள் என சுட்டிக்காட்டு

கடந்த மூன்று வருடங்களாக சீன அரசு கைகொண்ட கடுமையான கோவிட் கட்டுப்பாடுகளின் விளைவாக அந்நாட்டு பொருளாதாரத்தில் ஏற்பட்ட பின்னடைவு, அரசு ஊழியர்களின் மாத வருமானத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி இருப்பதாக அரச ஊழியர்களின் பேட்டிகள் மற்றும் இணைய பதிவுகள் மூலம் அறிய முடிவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

உள்ளூராட்சி நிர்வாகங்களின் வருமானம் குறைந்துபோனதால் அவற்றில் பணியாற்றுவோரின் சம்பளத்திலும் ஊக்கத் தொகையிலும் வெட்டு விழுந்திருப்பதாகவும் சில உள்ளூராட்சி சபைகள் கடன் பெற்று சம்பளம் கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம் மந்த நிலையை சமாளிக்கும் வகையில் தனியார் துறையை ஊக்குவிக்கும் முயற்சிகளில் சீன அரசு ஈடுபட்டிருந்தாலும், ஐம்பது மில்லியன் தனியார் நிறுவனங்கள் மென் மேலும் முதலீடு செய்வதை நிறுத்திக் கொண்டிருப்பதால் அரசுக்கான வரி வருமானததில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாக அமெரிக்காவின் தெற்கு கரோலினா வர்த்தக கல்லூரி பேராசிரியரான ஃபிராங்ஸீ தெரிவித்துள்ளார்.

கடந்த வருட மொத்த கைத்தொழில் மற்றும் வர்த்தக முதலீடுகளில் 52.2 சதவீதம் தனியார்துறையில் இருந்து வந்தவையாகும். 2022 இல் 0.9 சதவீதமாகக் காணப்பட்ட தனியார் முதலீடு வளர்ச்சி இவ்வாண்டின் முதல் காலாண்டில் 0.2 சதவீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது.

வொய்ஸ் ஒப் அமெரிக்கா வானொலிக்கு தகவல் தெரிவித்த பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு சீன பொருளாதார நிபுணர், அரசு ஊழியர்களின் சம்பளத்திலும் போனஸ் ஊக்கத் தொகையிலும் வெட்டு விழுந்திருப்பது அவர்களை திண்டாட்டத்தில் ஆழ்த்தியிருப்பதை சுட்டிக் காட்டினார்.

பொருளாதார செழிப்புக்கு பெயர்பெற்ற சுஸோங் நகரம் தனது ஆண்டு இறுதி ஊக்கத் தொகையை குறைத்திருப்பதாக செென் என்ற ஊழியர் கூறியுள்ளார்.

இவ்வருட ஊக்கத் தொகையில் ஏழாயிரம் முதல் 8,500 டொலர் வரையில் குறைப்பு செய்யப்படும் என இவர் தெரிவித்துள்ளார். வருடாந்த விடுமுறையை தவிர்ப்பதால் 2,500 டொலர் கிடைக்குமென்றும், இது தற்போது 1,300 டொலர்களாக குறைக்கப்பட்டிருப்பதாகவும் இவர் சுட்டிக் காட்டினார். தனது வருடாந்த ஊக்கத் தொகை 2,800 முதல் 4,200 டொலர் வரையில் குறைக்கப்படுவதற்கு வாய்ப்பு இருப்பதாகவும் இவர் தகவல் தெரிவித்திருக்கிறார்.

# FACETS Sri Lanka: சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கண்காட்சி 2024 ஜனவரியில்

ஆசியாவின் முதன்மையான இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கண்காட்சி தொடர்ச்சியாக 30ஆவது வருடமாக மீண்டும் இடம்பெறவுள்ளது. 2024 FACETS Sri Lanka கண்காட்சியானது, இலங்கையின் அதிசயங்களை உலகுக்குக் காட்சிப்படுத்துவதன் மூலம், நாட்டின் இரத்தினக்கல் மற்றும் ஆபரண கலாசாரத்தின் வரலாற்றை வெளிப்படுத்துகின்றது. உலகின் மிகச்சிறந்த இரத்தினக் கற்களை கொண்டுள்ளதன் மூலம், இலங்கை ஒரு இரத்தினக் களஞ்சியமாக உலகம் முழுவதும் அறியப்படுகின்றது. மிகப்பெரிய இரத்தினக்கல் மையங்களில் ஒன்றாக கருதப்படும் இலங்கையின் தனித்துவமான மற்றும் அழகிய இரத்தினக்கற்கள் உலகெங்கிலும் கேள்வியாக உள்ளன. இக் கண்காட்சியில் இலங்கை தனது அற்புதமான இரத்தினக்கற்களை காட்சிப்படுத்துவதற்கு மேலதிகமாக, உள்ளூர் கலாசார அம்சங்களுடன் உலகளாவிய போக்குகளை இணைக்கும் வகையிலான சிறப்பாக வடிவமைக்கப்பட்ட



ஆபரண வடிவமைப்புகளையும் உற்பத்தி செய்து காண்பிக்கிறது.

இம்முறை FACETS கண்காட்சியானது, இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் மூலவேர்களை எடுத்துக் காண்பிப்பதோடு, அரசர்கள் கால சகாப்தத்திற்குப் பயணித்து, பல ஆண்டுகளாக நாட்டின் இரத்தினங்கள் மற்றும் ஆபரணத் தொழில் எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளது என்பதை வெளிப்படுத்துகின்றது. FACETS 2024 கண்காட்சியானது, வடிவமைப்பு மற்றும் கைவினைப்பொருளின் உணர்ச்சிகரமான அம்சத்தை மையமாகக் கொண்டு இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்களின் உலகத்தை காட்சிப்படுத்துவதோடு, அவை ஆண்டாண்டு காலமாக எவ்வாறு வளர்ச்சியுற்றது என்பதையம் எடுத்துக் கூறுகின்றது. அது மாத்திரமன்றி, இது இத்தொழில்துறையின் எதிர்காலத்திற்கு அவசியமான விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதோடு, தற்கால போக்குடைய நகை வடிவமைப்புகள் மற்றும் எதிர்காலத்தில் உலகளாவிய பார்வையாளர்களை அது எவ்வாறு கவரும் என்பதையும் ஆராய்கிறது.

FACETS 2024 கண்காட்சியானது 2024 ஜனவரி 06 முதல் 08 வரை கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெறவுள்ளது. சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கண்காட்சியானது, உலகளாவிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழில்துறை, உயர் மட்ட வர்த்தக கொள்வனவாளர்கள், இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண மொத்த விற்பனையாளர்கள், ஏற்றுமதியாளர்கள், உற்பத்தியாளர்கள், பட்டைதீட்டுவோர், சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் உலகம் முழுவதும் உள்ள ஆர்வமுள்ளவர்கள் உள்ளிட்ட அனைவரையும் ஒன்றிணைக்கவுள்ளது.

## தினகரன் வர்த்தக உலா

எம்.எஸ். பாஹிம் E-mail: businesstkn@gmail.com

# பெறுமதி மிக்க ஆயுள் காப்புறுதி வர்த்தக சின்னமாக தரப்படுத்தப்பட்டுள்ள செலிங்கோ லைஃப்



இலங்கையின் ஆயுள் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி பிரிவுகளில் ஒட்டுமொத்த காப்புறுதி பிரிவுகளில் 2023ம் ஆண்டில் மிகச் பெறுமதிவாயந்த சிறந்த வர்த்தகச் சின்னமாக செலிங்கோ லைஃப் தெரிவு செய்யப்பட்டுள்ளது. பிராண்ட் பினான்ஸ் வெளியிட்டுள்ள நாட்டின் 100 முன்னணி வர்த்தக முத்திரைகளின் கீழ் இந்தத் தெரிவு இடம்பெற்றுள்ளது. பிராண்ட் பினான்ஸ் என்பது உலகின் முன்னணி சுயாதீன வர்த்தக முத்திரை மதிப்பீட்டு ஆலோசனை நிறுவனமாகும்.

'செலிங்கோ லைஃப்" வர்த்தக முத்திரைக்கு பிராண்ட் பினான்ஸ் 3.5 பில்லியன் ரூபா பெறுமதியை வழங்கி உள்ளது. இந்தப் பெறுமதியானது பொது காப்புறுதி பிரிவில் உயர் தரம் வழங்கப்பட்ட வர்த்தக முத்திரை பெறுமானத்தை விட அதிகமானதாகும். அண்மையில் வெளியிடப்பட்டுள்ள தரப்படுத்தல் வரிசைகளில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த தர வரிசையில் செலிங்கோ லைஃப் ஏற்கனவே இருந்த இடத்தை விட ஒரு இடம் மேலே வந்து 27வது இடத்தில் உள்ளது. இலங்கையின் மிகப் பெரிய வங்கிகள், தொலைத்தொடர்பு நிறுவனங்கள் மற்றும் சில்லறை (Retail) வர்த்தக ஜாம்பவான்கள் என 100 நிறுவனங்கள் அந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

இவ்வாண்டு செலிங்கோ லைஃப் ஏற்கனவே பிராண்ட் பினான்ஸிடமிருந்து 'AA' வர்த்தக முத்திரை தரத்தை பெற்றுள்ளது. ஆபத்தில் குறைவான மட்டம், நிதிக் கடப்பாடுகளுக்கு முகம் கொடுக்கும் உறுதியான ஆற்றல் என்பனவற்றை பிரதிபலிப்பதாக இது அமைந்துள்ளது.

# Orient Finance PLC இன் கிளை கிரிபத்கொடையில் ஆரம்பம்



இலங்கையில் முன்னணி நிதி நிறுவனமும், ஜனசக்தி குழுமத்தின் உறுப்பினருமான Orient Finance PLC கிரிபத்கொடையில் தமது புதிய கிளையினை திறந்து வைத்துள்ளது. தமது 32ஆவது கிளையை திறந்து வைத்துள்ளதன் மூலம் தமது கிளை வலையமைப்பை விரிவுபடுத்தியுள்ள Orient Finance PLC தமது சேவைகள் அனைத்து வாடிக்கையாளர்களையும் சென்றடைவதை உறுதி செய்துள்ளது.

Orient Finance PLC நாம் தனிப்பட்ட மற்றும் அக்கறையுடனான சேவையை வழங்குவதன் முக்கியத்துவத்தினை நன்கறிவோம். கிரிபத்கொடை கிளையிலுள்ள எமது நிபுணத்துவம்மிக்க குழு, தனிப்பயனாக்கப்பட்ட நிதியியல் தீர்வுகளை வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர்கள் சரியான தீர்மானங்களை மேற்கொள்ளவும் அவர்களது இலக்குகளை அடையவும் உதவுகிறது. தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்கு வளர்ச்சியை ஊக்குவிக்கும் புதுமையான நிதித்தீர்வுகளை வழங்கி அவர்களை மேம்படுத்துவதே எமது பிரதானமான நோக்கமாகும். எனவே எமது புதிய கிரிபத்கொடை கிளைக்கு வருகை தந்து எமது உன்னதமான சேவைகளை அனுபவிக்குமாறு நாம் உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ' என Orient Finance PLC இன் பணிப்பாளர் பிரதம நிறைவேற்று அதிகாரி கே.எம்.எம். ஜபீர் தெரிவித்தார்.

# HNBஇன் 800ஆவது ஸ்மார்ட் சுயசேவை இயந்திரத்தை பாதுகாப்பு தலைமையக வளாகத்தில் அமைக்கிறது



ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே அக்குரேகொடவில் உள்ள பாதுகாப்பு தலைமையக வளாகத்திற்குள் அமைந்துள்ள டிஜிட்டல் வங்கி வலயத்தில் பண மீள்சுழற்சி இயந்திரத்தை (Cash Recycle Machine CRM) HNB அண்மையில் திறந்து வைத்தது.

CRM ஆனது HNB இன் 800ஆவது சுயசேவை இயந்திரமாக (Self Service Machine SSM) HNB இன் சேவை வழங்குவதில் ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்தது. இந்த மேம்பட்ட வசதி வளாகத்தில் பணிபுரியும் ஏராளமான பணியாளர்களுக்கு, பணம் மீள எடுப்பது, வைப்பு செய்வது, நிகழ்நேர நிதிப் பரிமாற்றங்கள், கிரெடிட் கார்டு செட்டில்மென்ட்கள், கையடக்க தொலைபேசி ஊடாக பணப் பறிமாற்றம், மொபைல் ரீலோட்கள், மற்றும் பிற கட்டண செலுத்தல்கள் போன்ற சுயவங்கித் தேவைகளுக்கு வசதியான சேவையை வழங்கும்.

இந்த நிகழ்விற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதுடன், HNBஇன் டிஜிட்டல் வங்கிச் சேவையின் சிரேஷ்ட முகாமையாளர் சக்ஷிக அமரவர்தன, HNB சிரேஷ்ட முகாமையாளர் ஊழியர் வங்கி, பியகர ஜயரத்ன, HNB முகாமையாளர் பத்தரமுல்ல வாடிக்கையாளர் மையம், தினெத் ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சு மற்றும் முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரிகள், மற்றும் வங்கியின் உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# SMIB இற்கு புதிய தலைவராக ஜோசப் சூசைதாசன் நியமனம்



அரச ஈட்டு, முதலீட்டு வங்கி (SMIB), அதன் புதிய தலைவராக ஜோசப் சூசைதாசன் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த ஒன்பது தசாப்தங்களுக்கு மேலான வரலாற்றைக் கொண்ட முழுமையாக அரசாங்கத்திற்குச் சொந்தமான, அனுமதிப்பத்திரம் பெற்ற விசேட வங்கி எனும் வகையில், SMIB ஆனது இலங்கையில் தனிநபர்கள் மற்றும் வணிக நிறுவனங்களின் நிதித் தேவைகளுக்கு சேவை வழங்குவதில் அதன் நிலைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை தொடர்ச்சியாக நிரூபித்து வருகிறது.

ஜோசப் சூசைதாசன், இலங்கையிலும் வெளிநாடுகளிலும் ஆடை உற்பத்தி மற்றும் பொழுதுபோக்கு துறைகளில் 26 வருடங்களுக்கும் மேலான அனுபவமுள்ள ஒரு சிறந்த நிபுணத்துவம் வாய்ந்தவர். UK, பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனத்தின் உறுப்பினர் எனும் வகையில் ஜோசப் சூசைதாசன், Timex & Fergasam Group மற்றும் L.M.Collections (Pvt) Ltd, தான்சானியாவில் உள்ள Star Apparels (T) Limited ஆகியவற்றில் பொது முகாமையாளர் உள்ளிட்ட குறிப்பிடத்தக்க பதவிகளை வகித்துள்ளார்.

அவர் பிலிப்பைன்ஸில் உள்ள KPMG, USAID, Prime Exponents Inc போன்ற பிரபல நிறுவனங்களில் முகாமைத்துவ ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார்.

# Text Postsஐ அறிமுகம் செய்யும் TikTok



குறுகிய வீடியோக்களுக்கான முன்னணி தளமான TikTok, Text Postகளை அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளது. இது படைப்பாளர்களை மேம்படுத்தவும், சுய வெளிப்பாட்டிற்கான அற்புதமான வாய்ப்புகளை வழங்கவும் வடிவமைக்கப்பட்ட ஒரு புத்தாக்கமான புதிய வடிவமாகும். Text Postகள் மூலம், TikTok உள்ளடக்க உருவாக்கத்தின் எல்லைகளை விரிவுபடுத்துகிறது, சுறுசுறுப்பான சமூகம் அவர்களின் கதைகள், கவிதைகள், சமையல் குறிப்புகள் மற்றும் பிற எழுதப்பட்ட உள்ளடக்கங்களைக் காண்பிக்க மற்றொரு புத்தாக்கமான வசதியை வழங்குகிறது.

Text அடிப்படையிலான உள்ளடக்கத்தை உருவாக்குவதும் பகிர்வதும் எப்போதும் எளிமையாக இருந்ததில்லை. Camera Page, பாவனையாளர்களுக்கு இப்போது மூன்று விருப்பத்தேர்வுகள் உள்ளன: புகைப்படம், வீடியோ மற்றும் Text. Textஐ தேர்ந்தெடுப்பது Text உருவாக்கும் Pageஐ திறக்கிறது, அங்கு படைப்பாளிகள் தங்கள் எண்ணங்களையும் யோசனைகளையும் பாவனையாளர் Userfriendly interface இல் எழுதலாம்.

Post Pageஇல் ஒருமுறை, பாவனையாளர்கள் பழக்கமான தனிப் பயனாக்குதல் விருப்பங்களின் தொகுப்பைக் கண்டுபிடிப்பார்கள், அவர்களின் Text Posts எந்த வீடியோ அல்லது புகைப்படத்தையும் போலவே மாறும் மற்றும் ஈர்க்கக் கூடியதாக இருப்பதை உறுதிசெய்கிறது .

படைப்பாற்றலை அதிகரிக்கும் அற்புதமான பல அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

# காக்கை தீவு கடற்கரையை தூய்மைப்படுத்த ஒன்றிணைந்த Hemas FMCG,Clean Ocean Force



Hemas FMCG உற்பத்தி நிறுவனமானது, பிளாஸ்டிக் சேகரிப்பு மற்றும் இயற்கை சூழல் தொகுதிகளைப் பாதுகாப்பதில் தனது தொடர்ச்சியான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில், தனது ஊழியர்கள் மற்றும் ஏனைய தன்னார்வத் தொண்டர்களின் உற்சாகமான பங்கேற்புடன், அண்மையில் காக்கைதீவு கடற்கரையை தூய்மைப்படுத்துவதற்காக Clean Ocean Force உடன் கைகோர்த்தது.

# வாடிக்கையாளர்களுக்கு தனது அர்ப்பணிப்பை மீண்டும் வெளிப்படுத்தியுள்ள எயார்டெல் லங்கா

இலங்கையிலுள்ள வாடிக்கையாளர்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி மத்தியில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இருந்தபோதிலும், நாட்டிலுள்ள இளைஞர்களிடையே மிகவும் விருப்பமான தொலைத்தொடர்பு நிறுவனமாக விளங்குகின்ற எயார்டெல் லங்கா, கடினமான கால கட்டங்களில் தனது வாடிக்கையாளர்களுக்கு ஆதரவாக செயற்படும் என்ற அதன் தலையாய நிலைப்பாட்டை மீண்டும் உறுதிபட தெரிவித்துள்ளது.

'ஒரு தசாப்தத்திற்கு முன்னர் இலங்கையில் நாம் முதன் முதலில் செயற்பாடுகளை ஆரம்பித்த காலத்திலிருந்து, எயார்டெல் ஒரே இலக்கை நோக்கியே பயணித்தது. உலகத் தரம் வாய்ந்த நெட்வொர்க் அனுபவத்தை வழங்கவும், அதிகபட்ச பெறுமதி மற்றும் சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்க வேண்டும் என்பதே எமது நோக்கமாக காணப்பட்டது' 'இலங்கையின் பொருளாதாரத்தில் மிகவும் கடினமான வரலாற்றுச் சவால் நிறைந்த இக் காலப்பகுதியில் எமது வாடிக்கையாளர்களுக்கு உதவக்கூடிய எமது அர்ப்பணிப்பிலும், அவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் நாம் உறுதியாக நின்றோம். அவர்கள் எதிர்கொள்ளும் சுமையை தளர்த்தவும், எமது உலகத் தரம் வாய்ந்த வலையமைப்பை நம்பியிருக்கும் எமது வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் கல்வி, தொழில், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் தொடர்ந்து இணைந்திருப்பதற்கு விலையானது ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதை உறுதி செய்வதே எமது நோக்கம்' என எயார்டெல் லங்காவின் பிரதம நிறைவேற்று அதிகாரி அஷீஸ் சந்திரா தெரிவித்தார்.

கடந்த ஓராண்டில் இலங்கையில் 1.1 மில்லியனுக்கும் அதிகமானோர் எயார்டெல் வழங்கிய ப்றீடம் பெக்கேஜ் இற்கு ஈர்க்கப்பட்டு அவர்கள் முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு பெக்கேஜ் இற்கு மாறியதன் ஊடாக, கடந்தாண்டில் எயார்டெல் நிறுவனம் இலங்கையின் தொலைத்தொடர்பு துறையில் வலுவான வருமான வளர்ச்சியை பதிவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# Ocean Lankaவின் புதிய அலுவலக வளாகத்தை திறந்து வைப்பு



Fountain Set (Holdings) Limited, Brandix Lanka Limited, Hirdaramani Group ஆகியவற்றின் மதிப்புமிக்க கூட்டு நிறுவனமான Ocean Lanka (Pvt) Ltd ஆனது, அதன் நவீன வசதியுடன் புணரமைப்பு செய்யப்பட்ட புதிய அலுவலகத்தை அண்மையில் பெருமையுடன் திறந்து வைத்துள்ளது. இம் முக்கிய நிகழ்வானது மிகவும் கோலாகலமாக நடைபெற்றதுடன் மாலை நேர விருந்துபசாரமும் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. இது மதிப்புமிக்க நிறுவனங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பின் குறிப்பிடும்படியான மைல்கல்லைக் குறிக்கிறது.

இந்நிகழ்வில், Ocean Lanka முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி Austin Au வரவேற்புரை நிகழ்த்தியிருந்தார். இந்த முயற்சி தொடர்பில் தனது ஆர்வத்தையும் நன்றியையும் அவர் இதன்போது தெரிவித்தார்.

அவர் இங்கு தெரிவிக்கையில், "இன்றிரவு எமது பங்குதாரர்கள், விநியோகஸ்தர்கள், வாடிக்கையாளர்கள் உள்ளிட்ட அனைவரையும் நாம் இந்த இடத்தில் கொண்டிருப்பது ஒரு புதிய, மகிழ்ச்சியான மற்றும் உற்சாகமான அனுபவமாகும். இந்த கொண்டாட்டமானது, எமது புணரமைப்பு செய்யப்பட்ட அலுவலகத்தை திறப்பது மட்டுமல்லாது, எமது செயற்பாடுகள் ஆரம்பித்து 25ஆவது ஆண்டு நிறைவின் கொண்டாட்டமுமாகும்.

அதனை கொவிட் தொற்று காரணமாக எம்மால் கொண்டாட முடியாமல் போனது. ஓஷன் லங்காவின் வர்த்தகத்தின் புதிய சகாப்தத்தில் நாம் நுழைந்துள்ளோம். எமது புதிய தோற்றம் மற்றும் நோக்குடன், இதன் எதிர்காலம் எவ்வாறு அமையவுள்ளது என்பதைக் காண நாம் ஆவலாக உள்ளோம்." என்றார்.

இவ்விழாவில் முக்கிய பங்குதாரர்களின் விருந்தினர் உரைகளும் இடம்பெற்றன. Fountain Set (Holdings) Limited நிறைவேற்றுப் பணிப்பாளரும், அதன் உப தலைவருமான Dr. Li Gang, மகத்தான கூட்டு முயற்சி பற்றியும், சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரிடையேயும் அது கொண்டிருக்கும் அபரிமிதமான ஆற்றல் பற்றியும் தனது கருத்துகளை வெளிப்படுத்தினார். "ஓஷன் லங்காவின் புதிய அலுவலகத்திற்கு நான் வருகை தந்திருப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இது எமது தொழில்துறையில் சவாலான கால கட்டமாகும். எதிர்வரும் காலத்தில் அதை எம்மால் சமாளிக்க முடியுமென நம்புகிறேன்." என்றார்.

ஓஷன் லங்காவுடன் இணைந்து பணியாற்றுவது தொடர்பில், Brandix Lanka Limited குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அஷ்ரப் ஓமர் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

# உலக மெய்வல்லுனர் சம்பியன்சிப்பில் பங்கேற்க மேலும் மூன்று பேர் தகுதி

ஹங்கேரியில் இம்மாதம் நடைபெறவுள்ள உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடருக்கு இலங்கையைச் சேர்ந்த மேலும் 3 வீரர்கள் தகுதி பெற்றுக்கொண்டுள்ளதாக இலங்கை மெய்வல்லுனர் சங்கம் அறிவித்துள்ளது.




இதன்படி, கயந்திகா அபேரத்ன (பெண்களுக்கான 1500 மீற்றர்), நதீஷா தில்ஹானி லேகம்கே (பெண்களுக்கான ஈட்டி எறிதல்) மற்றும் அருண தர்ஷன (ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டம்) ஆகிய மூவரும் இம்முறை உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடருக்கு தகுதி பெற்றுள்ளனர்.

உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடருக்கான அடைவு மட்டத்தைப் பூர்த்தி செய்து தரவரிசைப் பட்டியலில் முன்னிலையில் இருந்த வீரர்கள் பல்வேறு காரணங்களால் போட்டியில் இருந்து விலகியதால், இந்த மூவருக்கும் அவர்களின் போட்டி நிகழ்ச்சிகளுக்கான ஒதுக்கீட்டின் அடிப்படையில் வாய்ப்பு கிடைத்துள்ளது.

இலங்கையின் முன்னணி மத்திய தூர ஓட்ட வீராங்கனையான கயந்திகா அபேரத்ன 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் 56ஆவது இடத்தைப் பெற்று உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடருக்கான வாய்ப்பை உறுதி செய்தார். 2ஆவது தடவையாக உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடருக்கு தகுதி பெற்ற அவர், ஸ்ரீயானி குலவன்ச மற்றும் சுசந்திகா ஜயசிங்க ஆகியோருக்குப் பின் 2 தடவைகள் உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடருக்கு தகுதி பெற்ற இலங்கை வீராங்கனையாக இடம்பிடித்தார்.

எவ்வாறாயினும், கயந்திகா அபேரத்ன உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். அவரும் அவரது பயிற்றுவிப்பாளர் சஜித் ஜயலாலும் இணைந்து இந்த முடிவை எடுத்துள்ளதாக இலங்கை மெய்வல்லுனர் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஆசிய விளையாட்டு விழாவை இலக்காகக் கொணடு பயிற்சிகளை முன்னெடுக்கும் நோக்கில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

பெண்களுக்கான ஈட்டி எறிதலில் தேசிய சம்பியனான நதீஷா லேகம்கே உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடருக்கு தகுதி பெறுவது இதுவே முதல் தடவையாகும். இலங்கையின் முன்னாள் ஈட்டி எறிதல் சம்பியனான நதீகா லக்மாலிக்குப் பின் உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் ஈட்டி எறிதல் போட்டிக்காக தகுதி பெற்ற முதல் இலங்கை வீராங்கனையாகவும் இடம்பிடித்தார்.

400 மீற்றர் ஓட்டப் போட்டியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அருண தர்ஷன, உலக தரவரிசையில் 48ஆவது இடத்தைப் பிடித்து இம்முறை உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடருக்கு தகுதி பெற்றுள்ளார், இதன் மூலம் 2005ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கை வீரர் ஒருவர் உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் 400 மீற்றர் ஓட்டப் போட்டிக்கு தகுதி பெற்றிருப்பது இதுவே முதல் முறையாகும்.

எவ்வாறாயினும், உலக தரவரிசையில் 12ஆவது இடத்தைப் பிடித்த 4400 மீற்றர் இலங்கை அஞ்சலோட்ட அணி ஏற்கனவே இம்முறை உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடருக்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, இலங்கையின் நட்சத்திர குறுந்தூர ஓட்ட வீரர் யுபுன் அபேகோன் இம்முறை உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டிக்கு தகுதி பெற்றிருந்தார். எனினும், காயம் காரணமாக, அவர் உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் இருந்து விலகுவதாக அறிவித்தார்.

அதன்படி இந்த ஆண்டு உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி 7 பேர் கொண்ட அணி பங்கேற்கவுள்ளதுடன், உலக சம்பியன்ஷிப் தொடர் வரலாற்றில் இலங்கை சார்பில் பங்குபற்றவுள்ள 2ஆவது பெரிய அணி இதுவாகும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானுடனான போட்டிக்கு ஆப்கான் அணி இலங்கையில்



பாகிஸ்தானுக்கு எதிரான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் ஆடுவதற்காக ஆப்கானிஸ்தான் அணி நேற்று (10) இலங்கை வந்தடைந்துள்ளது.

ஆப்கானிஸ்தானின் இந்த ஒருநாள் தொடரை இலங்கை நடத்தவுள்ளது. இந்தத் தொடரை நடத்துவதற்கு இலங்கையை தேர்வு செய்ததற்காக இலங்கை கிரிக்கெட் சபை தலைமை நிர்வாக அதிகாரி ஆஷ்லி டி சில்வா ஆப்கான் கிரிக்கெட் சபைக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்திருக்கும் ஆப்கான் அணி பாகிஸ்தானுடன் எதிர்வரும் ஓகஸ்ட் 22 ஆம் திகதி ஹம்பாந்தோட்டையில் முதல் ஒருநாள் போட்டியில் விளையாடவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி இதே மைதானத்தில் ஓகஸ்ட் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தொடர்ந்து மூன்றாவது ஒருநாள் போட்டி கொழும்பில் ஓகஸ்ட் 26 ஆம் திகதி நடைபெறும்.

ஏற்கனவே பாகிஸ்தான் அணி தலைவர் பாபர் அசாம் உட்பட பல வீரர்களும் லங்கா பிரீமியர் லீக் தொடரில் பங்கேற்று இலங்கையிலேயே உள்ளனர்.

# மகளிர் உலகக் கிண்ணம்: அரையிறுதியில் ஸ்பெயின்



மகளிர் உலகக் கிண்ண கால்பந்து போட்டியில் நெதர்லாந்தை வீழ்த்தி ஸ்பெயின் அணி அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

பெண்களுக்கான 9ஆவது உலகக் கிண்ண கால்பந்து தொடர் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாட்டில் நடைபெற்று வருகிறது. இதில் ஸ்பெயின், ஜப்பான், நெதர்லாந்து, சுவீடன், இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, கொலம்பியா மற்றும் பிரான்ஸ் ஆகிய 8 அணிகள் காலிறுதி சுற்றுக்கு தகுதி பெற்றன. நேற்று நடைபெற்ற முதல் காலிறுதி ஆட்டத்தில் ஸ்பெயின் மற்றும் நெதர்லாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

இரண்டு அணி வீராங்கனைகளும் தங்களது ஆட்டத்தை சிறப்பாக வெளிப்படுத்தினர். முதல் 15 நிமிடங்களில் இரண்டு அணிகளும் கோல் அடிக்கவில்லை.

2ஆவது கூடுதல் நேரத்தில் ஸ்பெயின் வீராங்கனை சல்மா செலிஸ்டெ பராலுயெலோ அயுங்கோனா கோல் அடித்தார்.

இதனால் ஸ்பெயின் 2–1 என முன்னிலை பெற்றது. அதன்பின் ஆட்டம் முடியும் வரை நெதர்லாந்து வீராங்கனைகளால் கோல் அடிக்க முடியவில்லை என்பதால் ஸ்பெயின் 2–1 என வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.



கெகிராவ கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான 16 வயதுக்குட்பட்ட கால்பந்தாட்ட போட்டியில் கலாவெவ முஸ்லிம் தேசிய பாடசாலை அணி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. அந்த அணியினருடன் பயிற்றுவிப்பாளர் பாடசாலை உடற்கல்வி ஆசிரியர் ஏ. அனாஸ் மொஹம்மட் காணப்படுகின்றார். *(படம்: கல்நேவ தினகரன் விசேட நிருபர்)*

# சமபோஷ விளையாட்டுப் போட்டி ஓகஸ்ட் 15 இல்



CBL நிறுவனத்தின் உப நிறுவனமான Plenty Foods (Pvt) Limited நிறுவனத்தின் முன்னணி தயாரிப்பான சமபோஷவின் வலுவூட்டலுடன் ஊவா, வடமத்தி, கிழக்கு, வடமேல் மற்றும் தெற்கு ஆகிய 5 மாகாணங்களை மையமாகக் கொண்டு நடத்தப்படும் '2023 சமபோஷ மாகாண பாடசாலை விளையாட்டுப் போட்டி' எதிர்வரும் ஓகஸ்ட் 15ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

சமபோஷவின் அனுசரணையுடன், மாகாணக் கல்வி அலுவலகங்களுடன் இணைந்து ஒவ்வொரு மாகாணத்திலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விளையாட்டுப் போட்டிகள் 5 மாகாணங்களைப் பிரதானப்படுத்தி தனித்தனியாக ஓகஸ்ட் மாதம் முதல் செப்டெம்பர் மாதம் முழுவதிலும் நடைபெறவுள்ளன.

இதில் 70க்கும் மேலான போட்டி நிகழ்வுகளில் 650க்கும் அதிகமான பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 18,000க்கும் அதிகமான வீர, வீராங்கனைகள் கலந்துகொள்ளவுள்ளனர். வெற்றிபெறும் பாடசாலைகள் மற்றும் வீர, வீராங்கனைகளுக்கு வெற்றிக் கிண்ணங்கள், சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் என்பன வழங்கப்படவுள்ளன.

# செல்சி மீது விசாரணை




இங்கிலிஷ் பிரிமியர் லீக் கால்பந்து கழகமான செல்சி, நிதி விதிமுறைகளை மீறியுள்ளதா என்பதை அறிய இங்கிலிஷ் பிரிமியர் லீக் நிர்வாகம் விசாரணை மேற்கொண்டு வருகிறது.

ரஷ்ய செல்வந்தரான ரோமன் அப்ராமொவிச் செல்சியின் உரிமையாளராக இருந்தபோது அந்த அணி நிதி விதிமுறைகளை மீறியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இங்கிலிஷ் பிரிமியர் லீக் தலைமை நிர்வாக அதிகாரி ரிச்சர்ட் மாஸ்டர்ஸ் கடந்த புதன்கிழமையன்று பிரிட்டனின் டைம்ஸ் நாளிதழிடம் இந்த விபரத்தைத் தெரிவித்தார்.

அமெரிக்க செல்வந்தரான டாட் பொவெலி உள்ளிட்டோரின் தலைமையிலான முதலீட்டுக் குழுவிடம் அப்ராமொவிச், 2022ஆம் ஆண்டில் செல்சியை விற்றார். பிரிட்டனில் உள்ள அப்ராமொவிச்சின் சொத்துகளை அந்நாட்டு அரசாங்கம் முடக்கியதைத் தொடர்ந்து செல்சி விற்கப்பட்டது. உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்ததையடுத்து அந்நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அப்ராமொவிச் செல்சி உரிமையாளராக இருந்தபோது அந்த அணியில் இடம்பெற்ற பல பரிவர்த்தனைகள் தொடர்பான விபரங்களை புதிய உரிமையாளர்கள் ஐரோப்பிய கால்பந்து ஒன்றியம், இங்கிலிஷ் பிரிமியர் லீக், இங்கிலாந்துக் கால்பந்துச் சங்கம் ஆகிய அமைப்புகளிடம் தெரியப்படுத்தினர்.

# பங்களாதேஷ் ஒருநாள் அணி தலைவராக ஷகீப் அறிவிப்பு



பங்களாதேஷ் ஒருநாள் அணித் தலைவராக ஷகீப் அல் ஹசன் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் ஆசிய கிண்ணத்தில் அவர் தலைமையில் பங்களாதேஷ் அணி விளையாடவுள்ளது.

அணித் தலைமை பொறுப்பில் இருந்து கடந்த ஓகஸ்ட் 3 ஆம் திகதி விலகிய தமீம் இக்பால், உபாதை காரணமாக ஆசியக் கிண்ணத் தொடரிலும் பங்கேற்பதில்லை என தெரிவித்துள்ளார்.

தீர்க்கமான காலப்பகுதியிலேயே ஷகீப் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளார். பங்களாதேஷ் அணி ஆசிய கிண்ணத் தொடரில் ஆடிய பின் செப்டெம்பரில் நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் ஆடவிருப்பதோடு அதனைத் தொடர்ந்து இந்தியாவில் உலகக் கிண்ண போட்டியில் பங்கேற்கவுள்ளது.

டாக்காவில் உள்ள தனது இல்லத்தில் நேற்று (11) திடீர் செய்தியாளர் சந்திப்பை நடத்திய பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தலைவர் நஸ்முல் ஹசன் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

"ஷகீப் அல் ஹசன் ஆசிய கிண்ணம், நியூசிலாந்துக்கு எதிரான தொடர் மற்றும் உலகக் கிண்ணத்திற்கு தலைவராக செயற்படவுள்ளார்.

(லங்கா பிரீமியர் லீக்) தொடரில் இருந்து அவர் நாடு திரும்பியதும் அவருடன் நாம் மேலும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளோம்.

நேற்று நான் அவருடன் தொலைபேசியில் பேசினேன். என்றாலும். தற்போது நடைபெறும் லீக் கிரிக்கெட் தொடருக்கு பின்னர் நேரடியாக பேசுவதே நல்லதாக இருக்கும். எந்த வகை கிரிக்கெட்டுக்கு அவர் தலைமை வகிப்பார் என்பது பற்றியும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளோம்" என்று நஸ்முல் ஹசன் குறிப்பிட்டார்.

ஷகீப் அல் ஹசன் இதற்கு முன்னர் 2009 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்கு இடையே பங்களாதேஷ் அணியை 49 ஒருநாள் போட்டிகளில் வழிநடத்தியுள்ளார். அதில் 22 போட்டிகளில் பங்களாதேஷ் அணி வெற்றியீட்டியுள்ளது.

# இலங்கை கால்பந்து சம்மேளன தலைவர்: சுமதிபாலவுக்கு சிரேஷ்ட வீரர்கள் ஆதரவு

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் கடந்த 27 வருடங்களாக மந்தமான செயற்பாடுகளும் ஊழல்களும் விளையாட்டு மற்றும் அதன் பங்குதாரர்களுக்கு தொடர்ச்சியான ஏமாற்றங்களையே ஏற்படுத்தியுள்ளன. முன்னைய முகாமைத்துவமானது கால்பந்து சம்மேளனம் மற்றும் அதன் அர்ப்பணிப்புள்ள ஆதரவாளர்களின் நலன்களை முன்னேற்றுவதை விட தனிப்பட்ட நலன்களுக்கே அதிக அக்கறை செலுத்தியது என்று சிரேஷ்ட வீரர்களின் சங்கத்தின் தலைவர் திலக் பெரேரா தெரிவித்தார்.

நிப்போன் ஹோட்டலில் இலங்கை கால்பந்தாட்டத்தை பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.




இது தொடர்பில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், (சொக்கர் மாஸ்டர்ஸ்) சிரேஷ்ட வீரர்களின் சங்கம் இந்த நிலையை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வந்துள்ளது. 'மும்மூர்த்திகளான' முன்னாள் நிர்வாகிகள் கால்பந்தின் வளர்ச்சியை ஊக்குவிப்பதை விட, தங்கள் சொந்த நலனுக்காக தங்கள் பதவிகளை நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வந்துள்ளனர்.

இவற்றை மாற்றியமைப்பதற்காக ஒரு இளம், ஆற்றல் மிக்க நபரை நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாக நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். இவர் மதிப்பும் நிபுணத்துவமும் மிகுந்த ஒரு தேசிய கால்பந்து வீரராக ஒரு கீர்த்திமிக்க வரலாற்றை கொண்டவராவார். அவரின் தொழில் முயற்சிசார்ந்த நுணுக்கம் மற்றும் மனிதவள முகாமைத்துவத்தில் உள்ள ஆற்றல்கள் இந்த பதவிக்கான அவரின் தகைமையை மேலும் உறுதிப்படுத்துகின்றன.

இவருடன் விரிவான கலந்துரையாடல்களில் ஈடுபட்டத்தில் எங்கள் நம்பிக்கை 100 வீதம் உயர்ந்துள்ளது. இலங்கை கால்பந்து முன்னெப்போதுமில்லாத உச்சத்திற்கு உயர்த்துவதற்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்புடன், அவரது தலைமையிலும் அதற்கு ஈடான அர்ப்பணிப்புள்ள அணியின் ஆதரவிலும் இலங்கை முழுவதும் உள்ள கால்பந்து ஆர்வலர்களை மகிழ்விக்கும் வகையில் கால்பந்து விளையாட்டு மறுமலர்ச்சி காணும் என்று நாங்கள் நம்புகிறோம்.

தக்சித சுமதிபாலவை இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவராக நாம் அறிவித்துள்ளோம். அவரை எமது ஆதரவுடன் போட்டியில் களமிறக்கவுள்ளோம்.

அத்தோடு சிறப்பானதொரு புதிய சகாப்தத்தை தோற்றுவிக்கும் என உறுதியாக நம்பும் இலங்கை சொக்கர் மாஸ்டர்ஸ் சங்கம் இந்தப் புதிய பாதைக்கான உறுதியான ஆதரவாளராக நிற்கிறது.

இலங்கை கால்பந்தாட்டத்தின் பிரகாசமான எதிர்காலத்தை நாங்கள் எதிர்பார்க்கிறோம். இது இந்த விளையாட்டின் அர்ப்பணிப்புள்ள ரசிகர்கள் மற்றும் ஆதரவாளர்களின் ஆசைகளை நிச்சயம் பூர்த்தி செய்வதாக இருக்கும் என்றார்.